எஸ். வி. சுப்பைய பாகவதர்,

எஸ். ஜி. கிட்டப்பா ஐயர், கே. பி. சுந்தராம்பாள்

இவர்கள் நடத்திவருகிற

# நந்தனர் சரித்திரம்.



இ. ராமசாமிக் கோன்,

பப்ளிஷர், புக்ஸெல்லர் & ரப்பர்ஸ்டாம்பு மேக்கர்,

வடக்குச்சித்திரை வீதி, மதுரை.

விலை] 1932 [அணா 4.

All Rights Reserved.

O-,2 MKN3, G
N32

120642

உ

சிவமயம்.

எஸ். வி. சுப்பைய பாகவதர்,

கே. எஸ். செல்லப்பா ஐயர், எஸ். ஜி. கிட்டப்பா ஐயர்,

கே. பி சுந்தராம்பாள், எஸ். ஆர். கமலம்

இவர்கள் நடத்திவருகிற

ஞானசொரூப

# நந்தனார் சரித்திரம்

ஓர் இனிய தமிழ் நாடகம்.

---

மதுரைத் தமிழ் வித்வான் ஸ்ரீ,

**நா. கிருஷ்ணசாமி நாயுடவர்கள்**

இயற்றியது.

---

இ. ராமசாமிக் கோன்,

பப்ளிஷர், புக்ஸெல்லர் & ரப்பர்ஸ்டாம்பு மேக்கர்,

வடக்குச்சித்திரை வீதி, மதுரை.

விலை] 1932. [அணா 4

All Rights Reserved.

எக்ஸெல்ஸியர் பிரஸ், மதுரை:—32.

6-FEB 1933

1-1933

உ

சிவமயம்.

மதுரைத் தமிழ் வித்வான்,

# ஸ்ரீ. நா. கிருஷ்ணசாமி நாயுடவர்கள்

இயற்றிய,

## ஞான சொரூப

# நந்தனார் சரித்திரம்.

விநாயகர்துதி வெண்பா.

சித்தி விநாயகனே சீர்சிறந்த நாயகனே
முத்தி நிலையருளும் முன்னவனே—பத்திமிகு
நந்தனார் நற்சரிதம் நானியம்ப நாவகத்து
வந்திருந்து நீதா வரம்.

நூற்பயன்.

நந்தனார் நாமம் நவில்பவர்தம் நாவினிக்கும்
சிந்தித்தால் சிந்தையெலாம் தித்திக்கும்—சந்தமுறக்
கேட்டார் செவியினிக்கும் கீதவிசைப் பேரின்ப
வீட்டார் பருகும் விருந்து.

அடக்கம்.

சேக்கிழார் பாரதியார் செப்பிவைத்த நூலிதனை
வாக்கினால் நானவில வந்ததிங்கு—நீக்கரிய
நந்தனார் பக்தியின்கண் நானடைந்த காதலிது
சிந்தையின்கண் இன்றே செருக்கு.

சங்கல்பமே என்ற மெட்டு.

இராகம்-கரஹரபிரியா-தாளம்-ஆதி.

பல்லவி:

சாட்சாத் கண பதியே நிதியே
சருவ நிரந்தர சமயா னந்தக்கடவுளே (சா)

---

சேக்கிழார்:-பெரிய புராணம் அருளிய பெரியார்.
பாரதியார்:-நந்தனார் கீர்த்தனம் அருளிய கோபாலகிருஷ்ண பாரதியார்.

அநுபல்லவி.

மாட்சி பெறும் வரதப்ரதான
மண்ணின் ஞாதி யாய மர்ந்த மகிபனே (சா)

சரணம்.

நந்தனர் சரிதம் நா னிங்கு பாட
நற்றமிழ்ப் பிரபந்தம் நவின்றிங்கெனைக் கண்பார்
சிந்தனையில் நீயே தினம் வசிக்கின்றாயே
செந்தமிழ்ப் பாஸ்கர கிருஷ்ணர் ஜெபித்திடும் (சா)

[நந்தனர் வேளூர் சென்று
சிவதருசனம் செய்கின்றார்]

தெலியலேரு ராமா என்ற மெட்டு.

இராகம்-தேனுகா-தாளம்-ஆதி.

பல்லவி.

வாருந்தோலும் பாரீர் வாங்கிக் கொள்ள வாரீர் (வா)

அநுபல்லவி.

தேரும் திருவிழாவும் நேர்ந்திடில்
தெரியும்படிக்குப் பறையடித்திடும் (வா)

சரணம்.

கன்மத்தாலே பிறவிக் கடலில் வந்து வந்து
கருத்தரித்துழலும் கவல் தீரவே
ஜென்ம சாபல்ய சிவகைங்கர்ய
சேவை செய்யு மடியேன் திவ்யமாய்க் கொணர்ந்த (வா)

ஐயே! சிவபிரானுடைய திருச்சந்நிதியிலே தேரும் திருவிழாவும் நடைபெறுகிற சமயத்தில் யானைமீது அம்பாரி வைத்து அதில் அமர்ந்து கொண்டு "ஹே ஜீவான்மாக்களே! நீங்கள் பரமாத்மாவை நாடிப்பணியுங்கள். உங்களுக்குப் பிறப்பிறப்பற்ற பேரின்பம் கிட்டும்" என்று சகல ஆன்மாக்களும் அறிந்துய்யும்படி பறைசாற்றி வருவதற்கேற்ற பெரும்பேறடைந்தவாரும் தோலும் அடியேனிடத்தில் இருக்கின்றன. இன்னும் நாத ஐக்கிய நிலையைச் செவிப்புலன் வழியாக நுகர்ந்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்து அழுமும் புறமும்

நெகிழ்ந்து ஆனந்த சொரூபத்தைத் தெரிந்து ஆன்மாக்கள் அனுபவித்துய்யுமாறு அனுக்கிரகிக்கின்ற மிருதங்கம் என்கிற புண்ணிய கருவிக்கமைந்தவாரும் தோலும் அடியேனிடத்தில்இருக்கின்றன. "உலகாதியனைத்தும் ஓம் என்கிற அந்த நாதவடிவிலிருந்து உண்டாய் மீண்டும் அந்த நாதத்திலேயே முடிகின்றது" என்கிற பரம இரகஸியத்தை ஆன்மாக்களுக்கு உபதேசிக்கிற புண்ணிய கருவியாகிய வீணை மிடில் யாழ் என்கிற இசைக் கருவிகளை அமைக்கின்ற வாரும் தோலும் அடியேனிடத்தில் இருக்கின்றன. வாங்கிக்கொள்ள வரவேண்டும். அடியேன் பிரார்த்தனை புரிந்துகொள்ளுகின்றேன்.

[நந்தனார் வேனூர் சிவாலய பூஜைக்குக் கோரோசனையும் பேரிகைடமாரா முதலிய வற்றிற்கு இசைவாரும் கொடுத்து ஆதனூர் வந்து சில பறையர்களைத் தமதருகுற அழைத்து]

கதர்க் கப்பல் கோடி தோணுதே என்ற மெட்டு.

இராகம்-பரசு-தாளம்-ஆதி.

பல்லவி.

சிவ தரிசனம் புரிவோம் வாரீர்
ஜென்மசாபல்யமாக கன்ம வினைகள்போக (சிவ)

அநுபல்லவி.

பவவிலையில் மானிடம் பலித்ததின் பயனாக (சிவ)

சரணம்.

அரிதரிது மானிடர் ஆதல் மிக அரிது
ஆம் நமக்காறறிவு அமைந்ததே அதில் பெரிது
அறிவோமே—ஆய்ந்து—தெரிவோமே
ஆசையைச் சிறிதகற்றி பூஜித நெறிஇயற்றி (சிவ)

துன்பத்தை இன்பமென்று தோய்வதே மனதின் தன்மை
துரியாதீ தங்கடந்து சுகிப்பதல்லவோ நன்மை
தொலையாது-பிறவி-நில்லாது
சோதிக பாலகா கிருஷ்ணா மாதவமென வியந்த (சிவ)

சகோதரர்களே! கானலை நீரென்றெண்ணி மான்கலங்குவது போல இவ்வுலகினைச் சதமென்றெண்ணி நாமும் கவலையடைகின்றோம். என்றாலும் நமக்குக்கிடைத்திருக்கிற காலத்தை முழுதும் இலௌகீக விஷயத்திலேயே கழித்துவிடாமல் ஒரு சிறிதளவேனும் தெய்வீக விஷயத்திலே ஈடுபடுத்தி வரவேண்டும். அதுவே இவ் அரிதான மானுட ஜென்மத்தின் கடமையாகும். "தன்னையும் தனக்காதாரத் தலைவனையுங் கண்டானேல் பின்னையத் தலைவன் தானாய்ப் பிரமமாய்ப் பிறப்புத்தீர்வன்" என்று பெரியோர் கூறி இருக்கின்றனர். ஆகவே நாம் ஆலயத்திற்குச் சென்று சிவதரிசனம் செய்து வருவோம். வாருங்கள் என்னுடன்.

மாடன்—நந்தா! நீ கூறுவது ஏதோ விந்தையாயிருக்கிறது. தன்னை அறியாதவன் உலகத்தில் எவனாவது இருக்கிறானா? பகுத்தறிவற்ற மிருகங்கூட அல்லவா தன்னை அறிந்துகொள்ளுகிறது. அதோ கருப்பணன்; இதோ வீரணன், நீ நீ நான் நான்; அது அது இது இது; அப்படி இருக்க ஏன் நாமெல்லாம் பிறவித்துன்பத்துழலவேண்டும்? இல்லை; கேட்கிறேன்!

நந்:—அப்பா! அப்படியல்ல! "இன்னது தேகந்தேகி இவனென உணர்வான்யாவன் அன்னவன் தன்னைத்தானென்றறிந்தவனாகுமென்றார்" என்று பெரியோர்கள் கூறியிருக்கின்றார்கள். நான் எனது என்கிற அகங்கார மமகாரங்களை அறவே ஒழித்து என்றும் ஒரு படித்தாய் எல்லாமாய் அல்லவுமாய்த் துன்று குணகுணங்கள் தோயாதாய் நின்ற சுயம்பேயே நான்" என்று அறிந்தவனே தன்னை அறிந்தவனாகின்றான். அவனே பிறவித் துன்பத்துழலாத மோட்ச சாதனத்துக் குரியவன்.

விட்டி:—ஏதோ நீ கூறுவது ஒன்றும் எங்களுக்குப் புலப்படவே இல்லை! எங்களுக்கு ஏரிதான் செல்வம்.

நந்:—இல்லை! இல்லை! சிவனைச் சிந்திக்க வாரும் நாம் செல்வம்.

சடலை:—பறையர்கள் நகைப்பார்
மறையவர் பகைப்பார்

நந்தன்:—இறையவன் உகப்பார்
நிறைபதம் அளிப்பார்

[இவர்களில் பதினொரு பெயர்கள் நந்தனுடன் ஒன்றுகூடி]

ஏண்டா! வீரா! நந்தன் கூறுவதும் ஒருவகையில் நியாயந் தானே! தெய்வம் அனைவருக்கும் பொது. சிவனைப்பறையர்கள் வணங்கக் கூடாதென்று எந்த ஏட்டிலும் சொல்லப்படவில்லை. ஏன் வணங்கினால் என்ன! அவர் நமது தலையை வீசிப்போடுவாரா! அதையுந்தான் பார்க்கலாம். நாம் நந்தனோடு இன்று சொந்தம் பாராட்டி எந்த இடமானாலுஞ் சரி; போய் வருவோமே?

மற்றவர்கள்:—சரி போய்வருவோம் வாருங்கள்.

[பதினொரு பேர்கள் அநுதினமும் நந்தன் கூடச்சென்று சிவதரிசனை செய்துவந்து பண்ணை வேலைகளைப் பார்த்து வருகிற வழக்கம் அதிகரிக்கவே பறையர்கள் எல்லாம் கூட்டம்போட்டு எல்லாரும் நாட்டாண்மைக்காரர் முன்னிலையில் வந்து]

நந்தன் என்ன நம்மஜாதியில் இல்லாத பழக்க வழக்கங்களை எல்லாம் ஏற்படுத்திக்கொண்டு வருகிறான். அவன் தான் கெடுவதில்லாமல் எல்லோரையும் கெடுக்க எத்தனித்தும் விட்டான். அவனோடு சுடலை ஒன்று மாடன் இரண்டு விட்டி மூன்று பெரியணன் நாலு வெள்ளையன் ஐந்து சனுகை ஆறு வீரன் ஏழு கருப்பு எட்டு ராக்கன் ஒன்போது மூக்கன் பத்து அந்த-பெரியவீட்டுச் செல்லாயி மகன் கொம்பேறி ஒன்று; ஆகப் பதினொரு பேரு அடிதடியாக் கோயிலுக்குப் போரதும் சாமியைக் கும்பிடுறதுமாகவே திரிகிறார்கள். வீடு வெள்ளாமை என்கிற கவலையே இல்லை.

நாட்:—ஏண்டா போக்கிரிப் பயல்களா! என்னடா இது அதிகப் பிரசங்கித் தனம்! நம்ம ஆண்டேமாருக்குத் தெரிஞ்சா விளக்கமாத்தாலே சாத்திப் பண்ணையைப் பிடிங்கிக்கிட்டு விரட்டி யடுச்சுடுவாரடா! வாயிலே மண்ணைப் போட்டுக் கொள்ளாதீர்கள்! கவனம்! எங்கே அவன் நந்தன்?

பதினொ:—இன்னைக்கி அவராப் போயிருக்காரு கோயிலுக்கு; நாங்கள் ஒருவரும் போவலேங்க!

நாட்:—நல்லது நீங்கள் இனி அவனோடு சேரக்கூடாது! அவன் வரட்டும் பேசிக்கொள்கிறேன். ஜாக்கிரதை.

[எல்லோரும் சென்று விடுகிறார்கள்.
நந்தனர் அங்குவந்து ஓரிடத்தில்
பதினொருபேரையும் சந்திக்கிறார்.]

எதுக்கிநாகு ஓ ரங்கரங்க என்ற பிலேட் மெட்டு.

இராகம்-தேசிகமுகாரி-தாளம்-ஆதி.

பல்லவி.

நீயே கதி நாதனே - ஓ - நித்ய நித்யா (நீ)
நித்யநித்யா-பரம-வித்யா (நீ)

அநுபல்லவி.

நாயேன் நின்னடி நாளுமே நம்பினேன் (நீ)

சரணம்.

தாயும் நீ தந்தை நீ — சகலமும் நீயே
சராசர மனைத்தும் நீ தமியன் நின் சேயே
ஆயும் போதுனையன்றி அணுவேனுமில்லையே
ஆத்ம தெரிசனந்தா அதுதானென் நிலையே (நீ)

[பதினொரு பேர்களும் ஓடோடி வந்து
நந்தனரைச் சூழ்ந்து வணங்கி நின்று]

நாட்கிழமை நட்சத்திரம் என்ற மெட்டு.

இராகம்-புன்னாகவராளி-தாளம்-ஆதி.

நந்தா-நாட்டாண்மைக்காரர் இன்று கூட்டங்கூட்டினார்
எங்களை-நாலு பேர்க்கு முன்னேவைத்துக் கோட்டி காட்டினார்
எங்கள்-பாட்டாவும் வந்துமெத்தப் பயமுறுத்தினார்
அந்தப்-பயலோடு கூடாதீரென்று வலியுறுத்தினார்
எங்கள்-பண்ணை போச்சுதென்று
அவர்கள்-படபடத்தார் மீன்று
நாங்கள்-என்ன செய்வோம் நன்று
என்ன-ஏற்றுக்கொண்டோம் ஒன்று-கூடி (நா)

[நந்தனர் புன்சிரிப்புக்கொண்டு தமது
விபூதிப் பையை எடுத்து ஒவ்வொரு
வர் நெற்றியிலும் நிறையப் பூசிவிட்டு]

நந்:—உங்கள் மலம் வெந்து நீருயிற்று.

பதி:—எங்கள் மனம் வந்து நேராயிற்று.

நந்:—வாரும் சிவதரிசனம் பண்ணி வருவோம்.

பதி:—நீரும் சொல்வதெல்லாம் செய்ய மருவோம்

[நந்தனார் பதினொரு பேருடன் உடனேதிருப்புன்கூர் செல்கின்றார்]

தாயிடத்திலன்பில்லாத என்ற மெட்டு.

இராகம்-தேசிகம்-தாளம்-ஆதி.

பல்லவி.

சற்றும்-தெய்வபக்தி யேயிலாத ஜென்மம் ஏனோ
ஜென்மம் ஏனோ-அதுவும்-கன்மந்தானோ சற்றும் (தெ)

அநுபல்லவி.

உய்யும்வழி தேடுதற்கே உற்றதிம் மானிடத்தோற்றம்
உண்டுடுத்திக் கொண்டிருந்தால் உண்டோ தேற்றம்-சற்றும் (தெ)

சரணம்.

மண்பெண் பொன்னுசையினுல் மாறிமாறிப் பிறந்திறந்தும்
மாபெரிய மனுக்குலத்தில் வந்துதித்தும்-சற்றும் (தெ)

வானுதித்த மின்னலைப்போல் வாழ்வுசதமில்லை கண்டோம்
மானும் பாஸ்கரகிருஷ்ணர் வாய்மை கொண்டோம்-சற்றும் (தெ)

[திருப்புன்கூர் நந்தி மிகப் பெரிதானதால் சிவதரிசனம் கிடைக்க மறைவாயிருந்ததற்காக நந்தனார் கவலடைகிறார்]

தசரதராஜகுமாரா என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

தரிசனம் தாத்தடை ஏனோ-வினைதானோ-பாவி
நானோ-தரிப்பேனோ (தரி)

அநுபல்லவி.

அரி அயன் தேடிக்காணா அமலப்ரதானா
அரஹர சம்போசிவ ஆனந்த மோனா
பரிபூரண மயமாய்ப் பரவு மெஞ்ஞானா
பார்வைக்கொருபெரிய மலையே-போன்ற
நிலையே-நந்தி தலையே-விலகிலையே (தரி)

சரணம்.

பறையனாய்ப் பிறந்திட்ட பாவமெல்லாந் திரண்டு
பருவதம்போ லல்லதோ படுத்திருக்கிற துருண்டு
குறை செய்திருந்தாலும் நீ கொண்டணைக்க முரண்டு
கொள்வதழகல்ல சர்வேசா-பவநாசா-
பிரகாசா ஜெகதீசா (தரி)

தேரடியில் நின்றுன்னைச் சேவித்தாலதுபோதும்
ஜென்மசாபல்ய மாகும் சேராது பவமேதும்
சிரடித் தஞ்சமென்றே சிந்தித்தேன் இனிமீதும்
திவ்யகருணை கிடைத் திடுமா வினை விடுமா
எனைத்தொடுமா - திடப்படுமா (தரி)

சிவபிரான் விருத்தம்.

வாராத பக்தன் வந்து மருவிநின் றுருகுகின்றான்
தீராத காதலன்பன் சிறந்தவன் நந்தி நீ கேள்
ஆராதென்மனது சற்றும் அடியவர்க் கிடுக்கணுற்றால்
நேராக என்னைக்காண நீ சற்று விலகுவாயே

[நந்தி புன்னகை பூண்டு சற்று விலகு
கின்றார். நந்தனார் தரிசிக்கின்றார்.]

இரகுவம்ஸசுதா, என்றமெட்டு.

இராகம்-கதனகுதூகலம்-தாளம்-ஆதி.

பல்லவி.

கண்களாரக் கண்டேன் கவல் தீர்த்துக் கொண்டேன்
அற்பனைக் கடங்காக் காருண்ய ரூபத்தைக் (கண்)

அநுபல்லவி.

மண்விண்ணாதியாய் மங்கள ஜோதியாய்
மந்திரஞ் செறிந்த சுந்தர சொரூபத்தைக் (கண்)

சரணம்.

பந்தபாச மோகம் விந்தையான தேகம்
சொந்தமற்ற போகம் சிந்தித்தல் விவேகம்
அந்தரங்கமே - எந்தனங்கமே
ஆனந்தம் ஆனந்தம் ஆத்ம தரிசனமே

சிட்டா சுரம்.

ஆதரவாகிய சாதக மருவிய
மூதவ மேவிய முனிவர ரருளிய
அரஹர சிவசிவ பரமெனு மறிவினை
அநுபவ நிலைபெறு பிரணவப் பொருளினைக் (கண்)

[தாண்டவமாடிக் கொண்டு பதினொரு பேர்களுடன் நந்தனார் அவ் ஆலயத்தருகிலுள்ள ஒரு சிறு குட்டையைக் குளமாக்க நினைக்கிறார். ஆங்கு விநாயகக் கடவுள் ஓர் மண்வெட்டியைப் போன்று ரூபமுற்று வந்து நந்தனாரைச் சந்திக்கிறார்.]

நந்:—ஐயனே! அடியேன் சேவிக்கிறேன்.

விநா:—மெய்யனே! நான் ஒரு மண் வெட்டி; சாதியில் மிகவும் தாழ்ந்தவன். ஒட்டன் என்கிற சாதியான். என்னைத் தாங்கள் சேவிப்பது தகாது என்று நினைக்கிறேன்.

நந்:—அப்படியா! அடியேனும் சாதியில் மிகவும் தாழ்ந்தவனே. அதாவது பறையன் என்கிற சாதியான். ஆயினும் ஈஸ்வரன் சர்வான்ம சொரூபமாக அந்தரியாமியாய் எந்தச் சரீரத்திலும் நிறைந்திருக்கிறான். அவன் இல்லாத இடம் பொருள் முதலிய எதுவுமில்லை. சூரியனுடைய பிரகாசமானது எப்படி 'இது சுத்தநீர் இது அசுத்தநீர்' என வேற்றுமை பாராட்டாமல் அதில் பிரதிபலிக்கின்றதோ அப்படியே சர்வேஸ்வரன் எல்லா வஸ்துக்களிடத்திலும் பிரதி பலிக்கின்றான். அவனுக்குச் சாதி நீதம் சம்பந்தம் முதலிய தனுகரண புவனபோக பேதமில்லை.

விநா:—நல்லது! இப்போது நீர் எதைப்பற்றியோ ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறதே?

நந்:—ஆம்! இக்குட்டையை ஒரு பெரிய குளமாக்க வேண்டுமென்று சிந்தித்துக்கொண் டிருக்கிறேன்.

விநா:—அப்படியா! அதற்கு நானுச்சு! என்னகூலி கொடுப்பீர்?

நந்:—ஐயனே என்னிடத்தில் பதக்குநெல் மாத்திர மிருக்கிறது. வேறு பொருள் ஒன்றுமில்லை.

விநா:—அதுவே எனக்குப்போதுமானது! அதைக் கொடுத்தால் நான் இக்குட்டையை வெட்டிக் குளமாக்கி விடுகிறேன்.

நந்:—நல்லது அப்படியே! இதோ இருக்கிறது நெல்.

[நந்தனர் பதக்கு நெல்லைக் கொடுத்து விட்டு ஆங்கு நிட்டையில் அமருகிறார். அவர் நிட்டை கலையுமுன் விநாயகர் அக் குட்டையைக் குளமாக்கி அதனருகே விக்கிரக ரூபமாக அமர்ந்து விடுகிறார். நந்தனர் நிட்டைகலைந்து வியப்புற்று]

பூங்காவினோதமேஎன்ற பிளேட் மெட்டு.

இராகம்-அரிகாம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஆஹா ஆச்சர்யமே
அழகிய தடாக மான கார்யமே (ஆ)

சந்தம்.

அத்திக்கும் இத்திக்கும் நீர்நிலை
சத்திக்கும் எத்திக்கும் பேரலை (ஆ)
அட்டிஇன்றி நான் நிட்டை கலையுமுன்
குட்டைநன்று குள வட்டமானது (ஆ)
அதி அழ குறு குளம் ததி மகி மூறு துளம் (ஆ)
அந்தம் முந்தும் மலரினம்
சிந்தும் உந்தும் பரிமளம் (ஆ)
அற்புதமாய் அன்னங்களும் ஆழ்ந் திடும்
பற்பலவாய் மீன் ஜாம்பினும் நீந் திடும்

அருகினில் மாமர வரிசையின் சாலை
தருநிழ லதுமிக ஒரு பெருஞ் சோலை (ஆ)
ஆடும் மயிலினம் கூடும் குலவி
பாடும் குயிலினம் நீடும் நிலவி (ஆ)
ஆசை யற்றிடு மாதவத் தரும்
மேவ சித்திடு மேன்மையைத் தரும் (ஆ)
ஆறுபோல நீர் ஊறுகின்றது
சேறிலாமலே தேறிநின்றது (ஆ)

அநுபல்லவி.

வாகான நற்றடாகம் வாரிதி போன்றபாகம்
வற்க மெனும்படி சுற்றிலும் கற்படி (ஆ)

சரணம்.

சுற்றுப் பிராரத் திருமதில்
சுந்தரமாக வமைந்திடு காட்சி
சூழ்ந்ததில் சித்திர வேலைகள்
சோபிதமாகிய பற்பல மாட்சி
சற்றுத் தூரத்தில் விநாயகர்
சன்னிதானமது உன்னத நீட்சி
சார்ந்ததில் கோபுர ஸ்தூபிகள்
தகதகதகவென மின்னிடு சூட்சி
தாமரையில் வண்டினங்கள் நாதம்- பட்சி
ஜாதிகள் பேசிடும் மறை வேதம்-கேட்க
ஆமிதில் நமக்கும் நல்லபோதம்- மனம்
ஆனந்தங் கொள்ளுது பிரமாதம்
ஆஸ்பத நிலைநீதம் அதிசயமகாதம்
பாஸ்கர கிருஷ்ணர் கீதம் பாடப்பாட விநோதம் (ஆ)

நண்பர்களே! இப்பொழுதுதான் இங்குவந்த மண்ணொட்டனிடத்தில் ஒருபதக்கு நெல்லைக் கூலியாகக் கொடுத்துவிட்டு நாம் ஈஸ்வர தியானத்தில் அமர்ந்திருந்தோம். அதற்குள் இங்கு இருந்த இந்தச் சிறு குட்டை ஒரு பெரிய பொற்றாமரையாக ஆயிருக்கிறது. வந்த மண்ணொட்டனையும் காணவில்லை. அருகில் ஒரு விநாயகர் ஆலயமும் அமைந்திருக்கிறது. இது சிவபிரான் திருவருளன்றி மற்றன்று. அதோ அத்தெருவில் ஒரு புராணிகர் ஏதோ சிவ புரா

ணத்தில் உபனியாசம் செய்கின்றனர். சற்றுத்தொலைவில் இருந்து அதனைக் கேட்டுவிட்டு ஆதனூர் செல்லுவோம் வாருங்கள்.

பதி:—நல்லது நந்தனாரே! உமது மகிமையை நாங்கள் எங்ஙனம் எடுத்துக் கூறுவது. மிக்க வியப்படைகின்றோம்.

[புராணிகர் சிதம்பர ஸ்தலமகிமையை எடுத்துக்கூறுகிறார். அதைக்கேட்ட நந்தனார் "நாளைப் போவோம் சிதம்பரம்" என்று வைராக்கியம் கொள்ளுகிறார்.]

சதா துதிக்க மதுரையைப்போல் என்ற மெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம் ரூபகம்.

பல்லவி.

சிதம்பரத்தைச் சென்று நாமும் சேவிப்போம் வாரீர்·நாளை (சி)

சந்தம்.

அது-தில்லைஎனும் புனிதநிலம் எல்லைகயிலாய தலம் (சி)
அலை-சித்தத் தொருநிலை அடைய பக்திக் கதிநல முடைய (சி)
வரு-ஜென்மவிமோ சனம்பெறவே கன்மமெலா மிகவறவே (சி)
பர-சிவசங்கரன் திருநடனம் தவமங்கள முறுபடனம் (சி)
திருச்-சிற்றம்பல மென ஒருதரம் சொல
முற்றும்வினை விலகிடச் செய வல (சி)
செப்பிடுசா யுச்யகதி ஒப்பிடுமோர் புண்யபதி (சி)
தேடித்தினம் சனகாதிய ரூடித்துதி தலமாகிய (சி)
தெதிங்கிணத்தோம் ததிங்கிணத்த
எனப்பரனார் பதம் நடித்த (சி)

அநுபல்லவி.

நிதம் பந்த பாசத்தில் நீங்காமல் தோய்ந்து
நிலையில்லாக் காயத்தை நிஜமென்று மாய்ந்து
மதங்கொண் டுழல்வது மதியல்ல ஆய்ந்து
மாலயனார் கொண்டாடும் கோலமுடன் நின்றாடும் (சி)

சரணம்.

காலை மாலை சதா காற்றைப்போல் ஓடி
காலமெல்லாம் காசு கா சென்று தேடி
கோலும் பிடித்துக் குறுகித் தள்ளாடி
கொண்டுபோவ தொன்றுமில்லை
கண்டதுண்டு விண்டதில்லை (சி)

பேராசையாம் மூன்று பேய்பிடித்துத் தள்ளும்
பின்னும் முன்னும் நம்மைப் பிறவியிலே தள்ளும்
பாராசையற்றுலே பரத்தாசை தான் கொள்ளும்
பாஸ்கர கிருஷ்ண சகோதரர் சாஸ்பத மூற்றசதாசிவ (சி)

நண்பர்களே "முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவிலொரு பிடிசாம்பரா வெந்து மண்ணுவதுங்கண்டு பின்னுமிந்தப் படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லால் பொன்னம் பலவ ரடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென்றேயறி வாரில்லையே" என்றபடி பெரியோர்கள் சிதம்பரத்தில் எழுந்தருளி உலகமுய்யத் தமது குஞ்சித பாத மெடுத்து நடித்தருளிய நடராஜ மூர்த்தி தரிசனங்கண்டுய்ய எண்ணிக் கண்ணீர் விட்டுக்கதறி இருக்கிறார்கள். ஆகவே நாம் நாளையே சிதம்பர தரிசனத்திற்குப் போகவேண்டும்! என்ன சொல்லுகிறீர்கள்?

பதி:—ஆகா! நந்தனரே! அப்படியே போவோம்!

[அனைவரும் ஆதனூர் புகுந்து அன்று இரவெல்லாம் சிவபஜனை செய்து ஆர ஹார முழக்கஞ் செய்கின்றனர். இதனைக்கேட்டிருந்த ஊர்ப்பறையர்கள் விடிந்ததும் ஒருவரை ஒருவர் சந்தித்து]

ராக்கன்:—ஏண்டா மூக்கா! என்ன இது வேடிக்கையாக இருக்கிறது! ராத்திரி எல்லாம் நடந்த ஆர்ப்பாட்டத்தைக் கேட்டாயா?

மூக்கன்:—ஆம் கேட்டேன்! நமது பெரிய பண்ணை நந்தன்தான்! அவனுக்கு ஏதோ சிதம்பரப்பைத்தியம் பிடித்திருக்கிறது! அவன் கெட்டதும் இல்லாமல் அவனோடு இன்னும் பதினொரு பேர்களையும் அவன் சேர்த்துக்கொண்டு இப்படிப் போக்கிரித் தனம் பண்ணி வருகிறான்; கேட்பாரில்லை.

ராக்:—நல்லது! இப்படியே கேட்பாரில்லை என்று விட்டுக்கொண்டிருந்தால் இவன் ஊரையே கெடுத்து விடுவானே!

மூக்:—அதற்குத்தான் ஒரு யோசனையும் தட்டுப்படவில்லை! நமது சேரியிலிருக்கிற பெரிய கிழவனிடம் சொல்லி அவனுக்குப் புத்திமதி சொல்லும்படி ஏற்பாடு செய்ய வேண்டும். அவருக்குத்தான் அவன் அடங்குவான்! நீ என்ன நினைக்கிறாய்?

எல்லோரும்:—அதுதான் சரி! இப்பொழுதே செய்யவேண்டும்.

மூக்கன்:—நல்லது நாம் போய் ஒரே கூட்டமாக அவனோடு பேசி அவன் புத்தியைக் கலைப்போம்! அவன் திரும்புகிறான் இல்லையா என்று பார்த்துப் பிறகு பெரிய கிழவனை அனுப்புவோம்.

எல்லோரும்:—அதுவுஞ்சரி! அதுவுஞ்சரி! புறப்படுங்கள் போவோம்.

]எல்லோரும் சென்று நந்தனரைக் காணுகிறார்கள். நந்தனர் அவர்களை வரவேற்று அமரும்படி செய்து]

நந்:—"கூற்றுவன் தான் நம்மை வந்து கொண்டேகும் முன்பாகப் போற்றும் சிதம்பரத்தைப் போயடைவோம் வந்திடுவீர்"

பறை:—"காற்று நடவு நட்டு நன்றாய் விளைவெடுத்துச் சோற்றுக்குதவும் வழி தொட்டிடுவோம் வந்திடுவாய்"

நந்:—"பண்டை வினையறுத்துப் பாசமெல்லாம் சுட்டெரித்து அண்டுஞ் சிதம்பரத்தை அண்டிடலாம் வந்திடுவீர்"

பறை:—நண்டைப் பிடித்துவந்து நன்றாய்க் கறிசமைத்து உண்டுபசி யாறி உழப்போவோம் வந்திடுவாய்"

நந்:—"உள்ள முருகி எங்கும் ஓங்கு சிவ போகமெனும் வெள்ளம் பருகிநித்ய வீடுறலாம் வந்திடுவீர்"

பறை:—"கள்ளைப்பருகி நித்தம் காடுகரை பார்த்து வந்தால் பிள்ளைகுட்டி பெண்டுசுற்றம் பேணிடலாம் வந்திடுவாய்"

நந்:—"வேண்டாப் பிறவி வினைமயக்கந் தீருதற்குத் தாண்டவ நாதனடி தானடைவோம் வந்திடுவீர்"

பறை:—"தோண்டி நிலமுழுது தூற்றி நடவுநட்டால் ஆண்டைமார் நம்மைவைத்து ஆதரிப்பார் வந்திடுவாய்"

நந்:—"தில்லைச் சிதம்பரனார் சேவடியைக் கண்டுவிட்டால் இல்லை இனிப்பிறவி எல்லீரும் வந்திடுவீர்"

பறை:—"எல்லைப் பிடாரி இருளனடி கண்டு விட்டால் நல்லமழை பெய்து நாம் வாழ்வோம் வந்திடுவாய்"

நந்:—என் இனத்தவர்களான அன்பர்களே! நான் பிறவிப்பிணியை நீக்குகின்ற தெய்விக சம்பந்தமான தத்துவ நிலையை அல்லவா எடுத்து உங்களுக்குப் போதிக்கின்றேன்!

பறை:—எங்கள் குலத்திற்பிறந்த குணவானே! நாங்கள் பசிப்பிணியை நீக்குகின்ற உய்வீக சம்பந்தமான வித்துவ நிலையை அல்லவா உனக்கு எடுத்துப் போதிக்கின்றோம்!

நந்:—சரி! சரி! பரிபக்குவமில்லாத உங்களிடத்தில் எனக்குப் பேச்சில்லை! இனி நீங்கள் செல்லலாம்.

பறை;—சரி! சரி! உன் பயித்தியத்தை எங்களால் தீர்க்கமுடியாது; ரொம்ப முத்திவிட்டது. நாங்கள் முன் செய்த யோசனைதான் சரி. செய்வது செய்தால் செட்டியார் வசப்படுவார், இனியேன் வீண் யோசனை! போவோம் வாருங்கள்.

[அனைவரும் சென்று பெரிய கிழவனை நந்தனுரிடத்திற்கு அனுப்புகின்றனர். அவர் கூனிக் குறுகி நடந்துவந்து நந்தனுரை நோக்கி]

நடந்ததேன்ன சோல்லம்மா என்ற மெட்டு.

இராகம்-நாதநாமகிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

நந்தா உன் நடத்தை-இந்த
நாடுசிரித்ததுகேள் நான் சொல்லும் திடத்தை (நந்)

அநுபல்லவி.

எங்கெ தந்த ஜாதியார் எங்கெ தந்த முறைப்படி
ஏதேது செய்வதோ இசைந்தந்த விதிப்படி
சிந்தித் தொழுகுவதே சிறப்புற்ற ஞாயம்
சேரியில்நீ இப்படித் திரிவதபாயம் (நந்)

சரணம்.

பறையர்க்கு விரதமும் பக்தி பூஜையுமேது
பாவ புண்ணியமென்று பார்ப்பதுங் கிடையாது
குறைவின்றி உழைப்பதும் குடிப்பதும் வாழ்வு
குலத்துக் கொடுங்காமல்நீ குதிப்பது தாழ்வு (நந்)

பூமியுழுது நட்டால் போட்டிடுமே சோறு
புகல் நமக்கிதுவன்றிப் பொருந்திடுமோ கூறு
சாமிநமக்கு நொண்டி சங்கிலி முனியன்
சாதியைக்கெடுக்க நீதான் வந்தாய் சனியன் (நந்)

நந்தா! நான் சொல்லுவதற்காக நீ கோபித்துக் கொள்ளாதே! 'குலத்தைக் கெடுக்கவந்த கோடாலிக் காம்பு' என்று தன்சாதி ஆசாரந்தவறியவனைச் சாற்றுகின்றார்கள். உற்றது சொன்னால் முற்றிலும் விரோதம் என்றபடி உன் கோபம் என்னை ஒன்றும் செய்யாது. ஆயிரமிருந்தாலும் நீ என்ன சிறுபிள்ளைதானே! தெரியாப் புத்தியினால் இப்படி எல்லாம் நீ வீடு என்றும் வாசல் என்றும் குலம் என்றும் தொழில் என்றும் பாராமல் நீ கெட்டுக் குட்டிச் சுவரானது மல்லாமல் இருக்கிற சிறு பயல்களை எல்லாம் கெடுத்து விட்டனை. இதனாலேதான் உன்னை முன் பின் பாராமல் ஒரு சனியன் என்றும் சொல்லிவிட்டேன் உன்னுடைய நன்மையைக்கருதியே நான் உன்னைக் கடிந்து பேசுகிறேன். சிவமாவது சவமாவது; சிதம்பரமாவது கிதம்பரமாவது. இது என்ன விளையாட்டுப்புத்தி! எல்லோரும் உன்னை ஒரு அதிகப்பிரசங்கி என்று அல்லவோ திட்டுகிறார்கள். இந்தா நந்தா! நான் உனக்குச் சொல்லுவதைக்கேள். நீ பலபேர் வாயிலும் படாதே. இனிமேல் சிவனைக் கும்பிடாதே. என் வார்த்தையைத்தட்டிக் கெடாதே. நமது குல வழக்கத்தைக் கைவிடாதே. இது உனக்குக் கொஞ்சமும் அடாதே. ஆகையால்,

போம் போம் இதுவும் கனமா என்ற மெட்டு.

இராகம்-கானடா-தாளம்-ஆதி.

பல்லவி.

வேண்டாமுனக் கிந்தக்கோட்டி-நந்தா
விட்டுவிடு வீணாக நீ கெட்டுப்போவாய்
சொன்னேன் சொன்னேன் (வே)

அநுபல்லவி.

தாண்டவமாடுந் தில்லைச் சங்கரனைச் சேவிக்க நீ
தானா மனுஷன் போனால்நமக் கினம் அடடா கேனாகேனா(வே)

சரணம்.

தேசத்தார்களெல்லாம் நம்மைத் தீண்டப்படாச்சாதி என்று
செப்பிவைத்தார் நாமதுபோல் ஜீவிப்பதும் மாடு தின்று
நீசத் தொழில் தான் நமக்கு நித்தமும் தமுக்கடிப்போம்
நெற்றிவேர்வைசொட்டவுழைத்திட்டுடன் கள்ளைக்குடிப்போம் (வே)

[நந்தனார் சிறிது சிரித்துக் கொண்டு பெரிய கிழவனை அருகணைத்து அவனது நெற்றியில் விபூதி பூசிச் செவியில் சிவநாம மோதி]

ஆடுபோம்பே என்ற மெட்டு.

இராகம்-புன்னாகவராளி-தாளம்-ஆதி.

பல்லவி.

கிழவனாரே வாரும் கிழவனாரே-என்னைக்
கீனு வென்று தானழைத்த கிழவனாரே (கிழ)

அநுபல்லவி.

குழகுழத்து முதுகு கூன் விழுந்து-ஐயோ
குறுகியும் இன்னும் ஆசை குறுகிலையே (கிழ)

சரணம்.

அங்கங் குறுகியல்லோ பெரிய தாத்தா - உமக்கு
ஆசை குறுகலையே பெரிய தாத்தா
எங்கும் நரைத்துமல்லோ பெரியபாட்டா - உமக்கு
ஏக்கம் நரைக்கிலையே பெரிய பாட்டா (கிழ)

கண்களிருண்டுமல்லோ பெரிய தாத்தா - உமக்குக்
காதல் குறுகிலையே பெரிய தாத்தா
தொங்கல் விழுந்துமல்லோ பெரிய பாட்டா - உமக்கு
தொந்தம் விழுகிலையே பெரிய பாட்டா (கிழ)

[சிறிது கோபக்குறியுடன் கிழவனை நோக்கி]

கிட்டாத ஜென்மமடா பெரிய தாத்தா - உனக்கிது
கிடைத்ததே அருமையடா பெரிய தாத்தா
எட்டாத முத்தி இன்பம் பெரிய பாட்டா-உனக்குநான்
எட்டும்படி செய்தேனடா பெரிய பாட்டா (கிழ)

[பெரிய கிழவர் எதார்த்த ஞான மடைந்து நந்தனார் பாதத்தில் விழுந்து அவரை நமஸ்கரித்து.]

### விருத்தம் முகாரி.

முன்னை நான் அஞ்ஞானத்தில் மூழ்கியே காலந் தோறும்
என்னை நான் அறியேனாகி எடுத்ததோ அனந்த ஜென்மம்
உன்னை நான் அடைந்ததாலே உளவெலா மறிந்தேனப்பா
தன்னிய னாகி நின்றேன் சற்குரு நீயே நந்தா

அப்பா நந்தா! என் சற்குருவே! உனது திருவருட் பார்வையினால் நான் கிருதார்த்தனானேன். எத்தனையோ ஊழிகாலம் நான் அஞ்ஞானத்திற்கிடந்து அழுந்தி அனந்த ஜென்மங்களை எடுத்தெடுத்து அழிந்து போனேன். என் பழம்பிறப்பின் பாங்குகளை நினைக்க நினைக்க என் நெஞ்சம் பதைக்கிறது. ஆதி காலந்தொட்டு இந்த நிமிஷம்வரை நான் சுர நர திரியக்காதி ரூபங்களான தேகங்களையே நான் நான் என்று அகங்கரித்துப் பாழடைந்தேன். அப்பா நந்தா! நீ என் பிறவி அறுக்கவந்தாய்! பேரின்பப் பெருவாழ்வு தந்தாய். இப்பொழுது நான் பிரத்தியகபின்ன பரவான்மாவான என்னையே நான் என்று உணர்ந்தேன்; ஆதலின் உய்யப்பெற்றேன்.

[பெரியகிழவர் தாண்டவமாடிக்கொண்டே திரும்பவந்து பறைச்சேரி சேருகிறார்.]

ஆதிசிதம்பரத்தே கிளியே என்ற மெட்டு.

இராகம்-சுருட்டி-தாளம் ஆதி.

கண்ணிகள்.

மெத்தப் பெரியவர் காண்—நந்தனார்
மேன்மைக் குரியவர்காண்
முத்திப் பெரியவர்காண்—நந்தனார்
முற்றத் துறந்தவர்காண்
வேடிக்கை அல்ல சோடித்துச் சொல்ல
நீடித்த நல்ல ஈடற்ற வல்ல (மெ)

சுத்த சை தன்னியங்காண்—நந்தனார்
தூயப்ர மன்னியங்காண்
பத்தி சை தன்னியங்காண்—நந்தனார்
பாசத்திற் கன்னியங்காண்
சோதனைக் கெட்டா ஓதத் தெவிட்டா
நாதவி சிட்டா போதனை தட்டா (மெ)

சாஸ்வத மூற்றவர்காண்—நந்தனார்
சாஸ்திரங் கற்றவர்காண்
பாஸ்கர கிருஷ்ணருந்தான்—பரஸ்பரம்
பாடிடப் பெற்றவர்காண்

சத்தியம் விண்டேன் நித்தியங் கண்டேன்
முத்தியுங் கொண்டேன் பித்தினி லண்டேன் (மெ)

[பெரிய கிழவரை நந்தனார் தன் மய மாக்கியதைப் பறையர்கள் கண்டு வியப்பும் விசனமு மடைகிறார்கள்.]

முள்ளுமுனையிலே மூணு என்ற மெட்டு.

இராகம்-வராளி-தாளம் ஆதி.

கண்ணிகள்.

ஆதனூர்ச் சேரியிலே ஆண்டேமார் விட்ட நிலம்
ஆயிரம் வேலி அதற்கு அதிபதி நந்தன்
நந்தனுக் குள்ளாக நாம் நானூறு தலைக்கட்டு
நமக்குள்ளே பெரிய கிழவன் நாட்டாண்மைக்காரன்
சிதம்பரப் பித்துப் பிடித்துச் சேட்டை செய்யும் நந்தனுக்கு
சென்று புத்தி சொல்லக் கிழவனைத் தேர்ந் தனுப்பினோம்
சென்ற கிழவனுக்கும் சேர்ந்து பித்துப் பிடித்த தண்ணே
சேரி முற்றும் சிவ முழக்கம் செவியடைத்தது
வெள்ளாண்மை வேலையெல்லாம் வேளா வேளை செய்யாமலே
வெட்டியாகக் காய்ந்து வாடி விட்டதென் செய்வோம்
விட்டநாற்று நட்டாலல்லோ விளையுங்காலம் விளைவுதேறும்
விணுவிடு நம் ஆண்டேமார்க்கு விடையளிக்கலாம்
என்ன செய்வோம் அண்ணமாரே
ஏது செய்வோம் தம்மிமாரே (ஆ)

ஒரு கிழவன்:—அடடே தம்பிகளா! இந்தா நான் சொல்றதைக் கேளு. நம்ம குலதெய்வத்தே நாம் வெகுநாளாக் கும்பிடு கிறதில்லே. அந்த குறைதான் இப்போ நந்தனே பிடிச்சு ஆட்டுது. வேறே ஒன்றுமில்லே. பேசாமே பூசாரியே கூப் பிட்டு ஊரிலே வரியே போட்டுச் சாமிகும்பிட ஏற்பாடு செய் யுங்கோ. பிறகு எல்லாம் சோணே கிருபையால் சுகமாக முடியும்.

மற்றவர்கள்:—அட ஆமப்பா அதுதான் சரி! அப்படிச் சொல்லு! ஒரு வேளே அந்த குறையாகத்தான் இருக்கலாம்.

[எல்லோரும் ஆமோதிக்கின்றனர் வரிப்போட்டு ஸ்வாமி கும்பிட உடனே ஏற்பாடு செய்கிறார்கள்.

## வில்லடிப் பாட்டு.

குள்ளன் கருப்பன் பிச்சாண்டி கூனன் இருளன் மாயாண்டி வெள்ளைமுழியன் சடையாண்டி வீரன் விரியன் மட்டத்தாண்டி மாடன் காத்தான் வழிமறித்தான் மண்டன் மலையன் கழுத்தறுத்தான் ஆடன் நொண்டி அடியடித்தான் அண்டன் முண்டன் வெறிபிடித்தான் மாரி சடச்சி ராக்காயி வாங்கித்தின்னி மூக்காயி காரி இசைக்கி காக்காயி காளி மூளி சீக்காயி தொட்டான் விட்டி துடையறுத்தான் தொந்தி வயிறன் படை எடுத்தான் பட்டான் படியன் பனைமரத்தான் பானை சோனை பாம்படித்தான் நாண்டுச் செத்தான் மூக்குறிஞ்சி நண்டு தின்னுன் நரிமூஞ்சி தூண்டிச்சின்னுன் பெத்தண்ணன் தொட்டியத்தான் பெரியண்ணன் வேலிக்காத்தான் முன்னடியான் வேட்டையாடி கிணற்றடியான் கூலிக் குழியன் முதலான குடும்பங்காத்த குலதெய்வம்.

[முதலான தெய்வங்களை எல்லாம் வருந்தி யழைத்து ஆடு கோழி வெட்டிப் படைக்கிறார்கள். ஆங்கு சாமியாடிமீது சாமி வருகிறது.]

சாமியாடி:—லே!லே லே லே லே லே அடே பயகளா!

பறை:—சாமி! சாமி! கும்புடுறே! கும்புடுறே!

சாமி:—நல்லது பயகளா! உங்களே எல்லாம் வச்சு நானு காப்பாத்திக் கினு வாறேனென்னு தெரியுமல்லவா?

பறை:—ஆமா சாமி தெரியும்! நாங்க ஒரு குறைவுஞ் செய்ய வில்லையே! எங்களை எப்பவும் காப்பாத்தனுங்கோ!

சாமி:—ஊம்! ஊம்! கொட்டினுத்தாண்டா தேளு! தெரிஞ்சுச்சா பயகா! ஊம் ஊம் நந்தன் சங்கதி எப்படி ஆச்சுதடா!

பறை:—ஆமா சாமி! சாமிகுறே என்னு தெரிஞ்சுகுணுதா இப்போ கும்புட்ரோம் சாமி! சாமி எங்களே காப்பாத்தனும்!

சாமி:—ஊம்! ஊம்! (ஆடிக்கொண்டே) ஏண்டா பயகா! எல்லாச் சாமிக்கும் படைப்பெல்லாம் சரியாப் போட்டியிக்காடா?

பறை:—போட்டியக்கு சாமி! போட்டியக்கு சாமி!

சாமி:—பொய்சொல்றேடா பயகா! சாமியே ஏய்க்கப் பாத்தா சரிப் படுமோடா பயகா! இயுக்கட்டும் பாத்துகிறே.

பறை:—இல்லே சாமி! நாங்கோ ஏய்க்கலே மறந்திருந்தாச் சொல் லணும். நாங்கோ உங்க மக்கோ சாமி!

சாமி.—அப்படியா! பொங்க சோறு வச்சிங்கோ! ஆடு வெட்டிக் கோழி வெட்டிக் கறி சமச்சு வச்சிங்கோ! தேங்கா பழோம் சூடேன் சாம்பூராணி வச்சிங்கோ! கள்ளுச் சாருயோம் வச் சிங்கோ! கருவாடு வச்சிங்கோ! எல்லாஞ்சரி! (பாடுகிறுன்)

அட-வக்கிறம் வக்கிறம் என்னிங்களே நீங்கள்
வைக்காமே போனிங்களே - அட
வக்கிறம் வக்கிறம் என்னிங்களே - நீங்கள்
வைக்காமே போனிங்களே (வை)

பறை:—சாமி! அது என்ன! இன்னது என்னு எங்களுக்குத் தெரி யலே! தெரிஞ்சா வைக்காமே இருப்போமா?

சாமி:—(பாடுகிறுன்) அட-வெத்தலேயுந்தா வச்சிங்களே நீங்கள்
வேணுமென்னு மறந்திங்களே - அட
வெத்தலேயுந்தா வச்சிங்களே - நீங்கள்
வேணுமென்னு மறந்திங்களே (வெ)

பறை:—சாமி! அது என்ன! இன்னது என்னு எங்களுக்குத் தெரி யலே! சாமி சொன்னு உடனே வச்சிடுறோம்.

சாமி:—(பாடுகிறுன்) அட-பாக்கையுந்தா வச்சிங்களே-நீங்கள்
பாராமே மறந்திங்களே - அட
பாக்கையுந்தா வச்சிங்களே - நீங்கள்
பாராமே மறந்திங்களே (பா)

பறை:—சாமி! அது என்ன! இன்னது என்னு எங்களுக்குத் தெரி யலே! எங்கமேலே வஞ்சனே இல்லே சாமி!

சாமி:—(ஆடிக்கொண்டு) சுண்ணும்பு வச்சிங்களா
சுண்ணும்பு வச்சிங்களா!
அட - சுண்ணும்பு வச்சிங்களா
சுண்ணும்பு வச்சிங்களா?

பறை:—இல்லே சாமி! மறந்துட்டோம்! மன்னிச்சுக்கொணும் அட பயலே மலயாண்டி! போடாபோ! ஓடுரு! ஓடு சீக்கிரம்! அவ சிவப்பாயி மவ விட்டிலே இக்குது! சாமி கோவுச்சுக்கிறுவாரு!

[மலையாண்டி ஓடுகிறுன்; நந்தனர் அங்கு வந்து சாமியாடியின் காது இரண்டையும் பிடித்துக்கிள்ளி அங்குமிங்குமாக ஆட்டுகிறுர்; இரத்தம் சொட்டுகிறது; சாமியாடி அப்படியே நடுநடுங்கி அப் பாடி ஆத்தாடி என்று கதறிக்கொண்டு]

ஐயையோ அப்பா! என்னே கொல்லாதே! நான் செத்தேன்; கும்புடுறே நந்தா! என்னேவிட்டு விடு ஆ! ஐயையோ!

[நந்தனர் சாமியாடி கன்னத்தில் ஓங்கி ஒரு அறைகொடுத்து அவனே முன்னுல் நிறுத்தி]

அங்கிங் கெனுதபடி அண்டமெலாம் நின்றவனேச்
செங்கலுக்குள் கொண்டு வந்து சேர்த்துநீர் வைத்தாலும்
இங்கவர்க்குச் சோறு கறிஇழி நாற்றக் கருவாடு
மங்கு கள்ளு சாராயம் வைத்ததென்ன சொல்லிடுவீர்

[எல்லோரும் போட்டது போட்டபடியே ஓடுகிறுர்கள். சாமியாடி மாத்திரம் ஓட வழியற்று, திறுதிறுவென்று விழித்து]

அப்பா நந்தா! எனக்கு ஒன்னுந் தெரியாது! நாங்க சாப்பிடுறதுக்குத்தான் இப்படிச் செய்றது! என்னே அடிக்காதே உன்னே கும்பிடுறேன். நானு புள்ளே குட்டிக்காரேன் அப்பா!

நந்:—நல்லது!

எல்லா விடத்திருக்கும் ஏகபர பிர்ம்மமது
புல்லனே உன்மீது பூரணமாய் வந்திருந்தால்
சொல்லடா என் கைக்குள் சுற்றிவைத்த வஸ்திதனே
அல்லா விடிலறைவேன் அப்படியே பல்லுதிர

சாமியாடி:—அப்பா நந்தா உன்னே கும்புடுறேன்; இனி அடித்தால் நான் செத்துப்பூவேன்; என் புள்ளே குட்டிகள் பாவோம் உன்னே சேரும். என்னே விட்டிடு; நான் ஓடிப்போறேன்.

நங்:—சரி! நான் சொல்லுகிறபடி சொல்லுகிறாயா?

சாமி:—நல்லது நான் சொல்லுகிறேன்; என்னை உயிரோடே உட்டா போதும். நானு இனிமே இந்த தொழிலுக்கே வரலே!

நங்:—அரஹர சிவசிவ அம்பலவாணு ஆடியதில்லைச் சிதம்பரநாதா
சங்கர சங்கர மஹாதேவா சம்போ சங்கர மஹாதேவா

சாமி:—அரஹர சிவசிவ அம்பலவாணு ஆடியதில்லைச் சிதம்பர நாதா
சங்கர சங்கர மஹாதேவா சம்போ சங்கர மஹாதேவா

நங்:—அறிவாய் நின்ற பரஞ்சோதி ஆனந்தமான பிரம்மாதி
பூமா யெங்கும் பரந்தவனே பசுபதிபாச புரந்தவனே
உலகாய் உயிரா யிருப்பவனே ஒன்றே பலவா யுதிப்பவனே
இன்பமும் துன்பமு மற்றவனே ஏகப் பரவெளி யுற்றவனே
ஆனந்தத் தாண்டவ மாடியவா அடியனை இதுதரி ஆண்டிடவா
சிவ சிவ சிவ சிவ சின்மய தேவா சிறியனை இதுதரி காத்திடவாவா
அம்பர விம்ப சிதம்பர நாதா அஞ்சித ரஞ்சித குஞ்சித பாதா
தந்திர மந்திர சுந்தர பாதா சங்கர சங்கர சங்கர நாதா

[சாமியாடியும் கூடவே சொல்லிக் கொண்டு ஆடுகின்றான். மற்றைப் பன்னிருவரும் ஆங்கு வந்து பஜனை செய்கின்றனர். பறையர்கள் நந்தனரை அடிமைகொண்ட வேதியரிடம் சொல்லச் செல்கின்றனர். வேதியர் திண்ணையில் உட்கார்ந்திருக்கிறார். பறையர்கள் அங்கு வந்துவீதியில் ஒருபுறம் ஒதுங்கி நின்று]

ஆண்டே! சேவிக்கிறோம்!

வே:—ஏண்டா பயல்களா! என்ன விசேஷம்? வயல்களைக் கவனித்து வருகிறீர்களா; வேளாவேளையில் போதுமானபடி தண்ணீர் விட்டு வருகிறீர்களா! மாடு கன்றுகள் நுழைந்து மேய்ந்து விடாதபடி கவனமாகக் காவல் இருந்து வருகிறீர்களா! அந்த மேலக்காட்டு வயலில் கதிர்பிடித்து வருகிறதா! மல்லாங்கிணற்று வயல் ஏதோ வாடி இருக்கிறதாமே! எங்கே அவன் நந்தன்?

பறை:—சாமீ! அவன் சங்கதியேத்தான் சொல்ல வந்தீக்கிறோம்.

பறையர்கள் விருத்தம்.

உங்களுக் கடிமையாக உழைத்திங்கு வந்த நந்தன்
எங்களில் தலைவனாக இருந்திட்ட நல்ல நந்தன்

மங்களகரமாய் நாங்கள் வாழ்வுற வைத்த நந்தன்
தங்கமா கோவு ஈனத் தான்தொழில் புரியும் நந்தன்

கவுனமிஸே யாரிதோரி என்ற மெட்டு.

இராகம்-தேசிகதர்பார்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

அந்த-நந்தன் சேதி சொல்லவந்தோம் நாங்களொன்று கூடி-அவன்
நடத்தை எல்லாம் சொல்ல நாவு நடுங்குதே அம்மாடி
நாவு-நடுங்குதே அம்மாடி-இந்த- நாளுமா தமாய்காடி-அவன்
நன்செய் புன்செய் நனவு கெட்டு நடக்கிறான்தெம்மாடி-அந்த (ந)

அந்திசந்தி சாம்பற்பூசி அரஹராவென்று துதிப்பான்-எங்கள்
அனைவரையும் சொல்லச்சொல்லி அடிவயிற்றினில் மிதிப்பான்
எங்கள்-அடி வயிற்றினில் மிதிப்பான்
இல்லை-அம்பலமென்று குதிப்பான்-அவன்
ஆடும் போதெல்லாம் ஆடவேண்டும்
அப்பத்தானெமை மதிப்பான்-அந்த (ந)

உதயத்தெழுந்து கலப்பை யேந்தி உழப்போவென்று சிரிப்பான்-
பதி-ஞெரு பேரைச் சேர்த்து மந்திர
மோதியோதி ஜெபிப்பான்-மந்திரம்
ஓதியோதி ஜெபிப்பான் அங்கே உயர்ந்தமான்தோல் விரிப்பான்
அதில்-ஒருதவசிபோலமர்ந்து கொண்டேதோ
உருப்போட்டவனுச் சரிப்பான்-அந்த (ந)

சேர்ந்தெங்களுடன் வயலில் இறங்கித்திரிந்தவன் ... எடுப்பான்
உடன்-சிதம்பரமென்று சொல்லச் சொ...லிச்
செவிட்டிலோ றைகொடுப்பான்
எங்கள்-செவிட்டிலோ றைகொடுப்பான்
அவன்செய்யுந் தொழிலை விடுப்பான்
சென்று-தெருவுக்குத் தெரு வோடியாடிச்
சேரி முழுதுங் கெடுப்பான்-அந்த (ந)

காற்றுப் பரித்த ஆயிரம்வேலி நடவு முடிந்தகாலம்-அங்கே
நல்ல மழைதான் சாமி அதனால் நன்செய்கள் பசுங்கோலம்-தனி
நன்செய்கள் பசுங்கோலம் கதிர் கன்றாய் விளைந்து சீலம்-பெற
நாடாமலவன் ஆடிக்குதித்து நடப்பதே பெரும்ஜாலம்-அந்த (நந்)

27 ... N32



சாமின்னு! நாங்க என்ன செய்வோம்! எங்களுக்கெல்லாம் தலைவனான நந்தனுக்குச் சிதம்பரப் பயித்தியம் பிடித்துவிட்டது. அதனால் அவன் காடுகரைகளைக் கவனிப்பதும் இல்லை. எங்களைச்சரியாக உழுது பயிரட்டு நடவு நட்டுக் கவனித்துவர விடுவதும் இல்லை. 'சேரி போனாப்போவுது நீங்கள் சிதம்பரம் வாருங்கள்' என்று எங்களை அடிக்கிறான். அவன் அடிக்கும் உதைக்கும் பயந்து பனிரண்டு பேர்கள் அவனுடன் சேர்ந்துகொண்டு ஆடுவதும் பாடுவதும் கோயிலுக்குப்போவதும் குளத்துக்குப் போவமாகவே திரிகிறாங்கோ. எங்கள் கொலதேவதைகளின் குறையோ என்று நினைத்து நாங்கோ ...ரில் வரிப்போட்டுச் சாமிகும்பிட்டோம். அங்கும் வந்து எங்களை அடித்துத் துரத்திவிட்டு எங்க சாமியாடியேப் பிடித்துக்கொண்டு காதைத் திருகித் தொலேபோட்டு அடிச்சுக் கொன்னுபூட்டாஞ் சாமி! அவன் மொரட்டுபயலாவு மிருக்கிறான். பண்ணேயோ இப்போது நல்ல மழை பெய்து பயிர் பச்சை தகதக என்னு வந்து கதிர்பாய்ந்து இருக்குது. இனித்தான் நல்லாக்கவனிக்கணும். நாங்கதான் கவனிக்கிறோம். ஆனாலும் அந்த நந்தன் பார்வைமாத்திரம் இருந்தால் போதும்; அத்தனையும் தங்கந்தானே! அதைக் கெடுக்கிறான் சாமி! இனி நீங்கதான் அவனுக்குச் சொல்லிப் பயமுறுத்த வேணும். எங்களால் ஆகாது. நீங்க கவனிக்க இல்லேயானா உங்க நிலமெல்லாம் நாசமாப்போவும். நாங்களும் கெட்டுக் குட்டிச் சுவராப் போவோம். ஆண்டே! நீங்கவந்து பாத்தா அப்போ அவன் ...த்தை உங்களுக்குத் தெரியும். நாங்கவந்து சொன்னமென்னு அவனுக்குத் தெரிஞ்சா எங்களே அவன் கொன்னுபூடுவான். நாங்க பே...ஞ்சாமி! கும்புடுரோம்.

120642

### வேதியர் விருத்தம்.

விடியுமுன் வந்தானிங்கே விநோதக் கும்பிடுகள் போட்டான்
அடியனைப் போலே தேடோ அளப்பினன் போடா வென்றேன்
படியினை இவனைப் போலோர் பசப்பனைப் பார்த்தேனில்லை
கடிபெறும் சிதம்பரத்தை நண்ணவு மிடங் கொடேனே

பறையர்களே! நீங்கள் இனிமேல் அந்த நந்தனுக்குப் பயப்படவேண்டாம். உங்களை அடிக்கவும் மிதிக்கவுமா செய்தான்? நல்லது இருக்கட்டும்; நான் பேசிக்கொள்கிறேன். "கொடுப்பதைக்கொடுத்தாலல்லவோ லவண்டி குடங் கொண்டு தண்ணிக்குப் போவாள்"

என்பது போல அவனை நான் செய்கிற விதஞ் செய்து ஒடுக்கு கின்றேன். காடுகரை விளைவுகளை நீங்கள் மெத்தக்கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். இனிமேல்தான் கவனம் அதிகம் வேணும்.

பறை:—நல்லது ஆண்டே! நாங்கள் கும்பிடுறோம்.

[செல்லுகின்றனர்; சிறிது நேரஞ் சென்று நந்தனார் அங்கு வருகிறார்]

தக்கபாராங்கல்லை என்ற மெட்டு.

இராகம் மோஹனம் தாளம் ஆதி.

கண்ணிகள்.

சிதம்பர மென்றொரு தலமாம்-அதைச்
சென்று தெரிசித்தால் நலமாம்
மதங்கொண்ட மானிட தேகம்-விழுமுன்
வாய்ப்பது தான் நல்ல யோகம் (சித)

தில்லை என்பதொரு ஊராம்-அதற்குச்
சிற்சபை என்பதும் பேராம்
இல்லை இனி மீது ஜென்மம்.அதில்
ஈடுபட்டால் அறுங் கன்மம் (சித)

நூபுரகுஞ்சித நடனம்-பிறவி
நோயைத் தொலைத்திடும் படனம்
கோபுரத்தூபி கண் டாலும்-போதும்
கோடி புண்ய மென்பார் மேலும் (சித)

ஆடிப்பொன்னம்பல ஞாலம்-சிவன்
ஆனந்தத் தாண்டவ கோலம்
தேடிப்போய் நான் கண்டு சேவை-செய்யத்
தேவரீர் உத்தாரந் தேவை (சித)

ஆண்டே! அடியேன் சேவிக்கிறேன். நான் தில்லைச் சிதம்பரம் சென்று சேவிக்க வேண்டுமென்று நாட்ட முற்றிருக்கிறேன். இந்தச்சரீரம் தங்களுக்கு அடிமை, ஆகவே தாங்கள் தங்கள் திருவாக்கினாலே எனக்கு உத்தரவு அளித்தருள வேண்டும்.

[வேதியர் இதைக்கேட்டதும் இரு கண்களும் சிவந்து கோபந் ததும்பி]

அடே நந்தா! அடே வெறியா! அடே சிறியா! அடே பறையா! ஆட்டைக்கடித்து மாட்டைக்கடித்து கடைசியில் மனுஷனையுமா கடிக்க எத்தனித்து விட்டாய்? அடே பயலே! என்ன சொல்லினை! தில்-லைச்-சி-த-ம்-பா-மா-!எப்படிடா இப்பெயர் உன் வாயில் அதுவும் பொல்லாத பாவப் பிறவியாகிய புலையன் வாயில் நுழைந்தது!

விருத்தம்.

பாவமே செய்துபாவிப் பறையனுய்ப் பிறந்தாய் மேலும்
தேவமா சிதம்பரத்தைச் சிந்திக்கலாமோ நந்தா
ஆவதிங் கிதனுலென்ன அனியாய தோஷமன்றோ
கேவல முன்னைச்சாரும் கேட்டவர் சிரிப்பார்தானே

இந்த விபரீத காலத்திலே என்ற மெட்டு.

இராகம்-தேசிகதோடி தாளம்-ஆதி.

பல்லவி,

இது-அனியாயம் அனியாயம்-ஆருஞ்சகியார்-இது (அ)

அநுபல்லவி.

தனியான அந்தணரே தான்வணங்குந் தெய்வமாச்சு
சாதியிலே தாழ்மையான சண்டாளப் பறையன் பேச்சு
தக்கதாகுமா-தர்மம்-மிக்கதாகுமா—எந்தச்
சாத்திரத்திலும் கண்டதில்லை கோத்திரத்திற்கே கொடியதொல்லை(அ)

[illegible]முற்றும் சிவசிவென்று செப்பும்படி செய்தனையாம்
சிறியார் பெரியார் எனும் பாராமல் சிறப்பலரை வைதனையாம்
செருக்கு மிகுத்ததா-அல்லது-கிறுக்குப் பிடித்ததா—என்
சேதிஇன்னமும் தெரியவில்லையோ சாதிமுறைமை புரியவில்லையோ ()

எல்லார்க்கும் சிதம்பரமா இருப்பதெல்லாம் மாணிக்கமா
இப்படி அறிவுகெட்டும் ஒரு ஏமாளி ஆகலாமா
இல்லையா சாதி-இருந்தால்-சொல்லலாம் நீதி—ஏதோ
இடிவிழுந்தாற்போல் நீவந்து இப்படி மொழிந்தாய் மனந்துணிந்து()

அடே பயலே! என்ன அக்கிரமஞ் செய்யத் துணிந்துவிட்டாய்! அதட்டிக் கேட்க ஆளில்லாவிட்டால், தம்பி சண்டப்பிரசண்டமா! தெரியுமா என் சேதி? ஜாக்கிரதை பயலே! சேரியில் ஏதாவது குற்றங்குறை உன்னுல் நேர்ந்திருக்கிறது என்று இனி ஒருதரம்

சான் கேள்விப்பட்டால் உன்னைச் சதை சதையாகப் பிச்சு அந்த கட்டையெல்லாம் வாங்குவேன்! போ நில்லாதே! மடப்பயல்!

[நந்தனர் சென்றுவிடுகிறார். வேதியர் மனைவி உடனே திண்ணையில் வந்து]

யார் அது! நமது நந்தனையா இப்படிப் பேசினீர்கள்?

வே:—ஆம்! அந்த மடப்பயலைத்தான்!

மனைவி:—நான் அவனை என் பிள்ளையைப் போலல்லவோ அன்புடன் நடத்திவருகிறேன்; நீங்கள் ஏன் இப்படிப் பேசினீர்கள்?

வே:—நானும் அப்படித்தான்; அதில் ஒன்றும் குறைவில்லை; என்றாலும் அவன் சாதி என்ன! அவன் ஒழுக்கம் என்ன! அவன் என்னிடத்தில் வந்து கொஞ்சமும் நெஞ்சம் அஞ்சாமல் 'சிதம்பரம்போக விடைதர வேண்டும்' என்று கேட்பதென்ன!

மனைவி:—ஏன்! சிதம்பரம் போகக்கூடியவர்கள் இன்னின்ன சாதியார்தான் என்று சாஸ்திரத்திற் கூறுகிறதா! அல்லது சிதம்பரம் என்கிற ஊரில் பறைச்சேரியே இல்லாமல் இருக்கிறதா?

வே:—என் பிரிய நாயகி! நீ கேட்கின்ற கேள்விக்கு என்னால் பதில் சொல்லமுடியவில்லை; நான் என்ன; எந்த வைதிகசாஸ்திரப் பழம் பண்டிதர்களினாலும் முடியாது. என்றாலும் இப்போது அவன் சிதம்பரம் போவானானால் நமது நன்செய் புன்செய் வேளாண்மை சரியாய் விளைவுகண்டு வீடுவந்து சேராதல்லவா! அதற்காக நான் அப்படிக்கோபித்துப் பேசினேன். மேலும் வேலைக்காரர்களிடத்தில் எப்பொழுதும் சிடு சிடு என்று பேசி வந்தால்தான் அவர்கள் வேலையில் குறைவு சோராமற் பயந்து பார்த்து வருவார்ளென்பது உலக வழக்கந்தானே?

மனைவி:—அது என்ன வஞ்சகம்! ஒரு வேலைக்காரன் ஏதாவது குற்றஞ் செய்துவிட்டால் எஜமானனவர் உடனே அவனைக் கோபிக்கின்றார் அல்லவா! அதேமாதிரி சிலசமயங்களிலேனும் அவனது முயற்சியைப்பற்றி அவனை வியந்து பாராட்டினால்தானே அவனுக்கும் ஒரு திருப்தியும் உரித்தும் ஏற்படும்!

வேதி:—காதலி! நீ கூறுவது நியாயந்தான்! என்றாலும் அது மனதுக்குள் இருக்கவேண்டுமன்றி வெளியிற் கூறுவது விசேஷமன்று. இதுபற்றியே "நேசனைக் காணவிடத்து நெஞ்சாரவே

துதித்தல் ஆசானை எவ்விடத்துமப்படியே நேச மனையாளைப் பஞ்சணையில் மைந்தர்தமை நெஞ்சில் வினையாளை வேலை முடிவில்'' என்று நீதி சாஸ்திரங் கூறுகின்றது.

மனைவி:—நல்லது! இப்பொழுது நீங்களே உங்களுடைய நீதி மொழிப்பிரகாரம் என்னிடத்தில் அகப்பட்டுக் கொண்டீர்கள். அதாவது "வினையாளை வேலைமுடிவில்'' என்று ஈற்றடி கூறுகிறது. அதன்படியாவது வேலை ஆட்களை எஜமான்மார்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள் அல்லவா? எவ்வளவோ காலமாகத்தான் நந்தன் நமக்குப் பண்ணையாளாக அமர்ந்திருக்கிறான். அவன் தொட்ட நிலங்களிலெல்லாம் பொன் விளைகிறதே! நீங்கள் ஒரு தடவையாவது நந்தனை வியந்து பாராட்டி இருக்கிறீர்களா! சொல்லுங்கள் பார்க்கலாம்.

வேதி:—தேவி! இல்லை! இல்லை! அது என்மீது குற்றந்தான்.

மனைவி:—குற்றமென்று ஒப்புக்கொண்டீர்களா! அப்படியானால் நந்தனை இப்பொழுதே அழைத்து வந்து அவனைச் சமாதானப்படுத்திச் சந்தோஷமாக அனுப்புங்கள்.

வேதி:—எங்கே போவான் நந்தன்! நாளை வருவான்; உன் மனம் போல் சமாதானப்படுத்தி அனுப்பலாம்.

[இருவரும் வீட்டுக்குள் செல்கின்றனர் மறுநாள் காலை நந்தன் அங்கு வருகிறான்.]

எப்புகேிருபகல்குஞே என்ற மெட்டு.

இராகம்-தேசிகமுகாரி. தாளம்-ஆதி.

பல்லவி.

எப்பொழுது மனதிரங்குமோ-என்னையாண்ட வேதியரே (எ)

அநுபல்லவி.

செப்பிவிடை தாமளிக்க சிதம்பரம்போய் நான் களிக்க
செய்தபவம் போமே சாமி தேடுமெனைத் தில்லைப் பூமி (எ)

சரணம்.

பண்டிருந்தின்நாள் வரையும் பாடுபட்ட அடிமை நானே
பகலிரவாயுழைத் துழைத்தும் பாவமல்லா தறிந்திலேனே
கொண்டனைக்க வேணுமிதே கோடிகோடிப் புனிதமாகும்
கோபமின்றிப் போய்வாவென்று கூறினுலென் கவலை ஏகும் (எ)

சாமி! நமஸ்காரம்! நேற்று என்னை மிகவும் கோபித்துக் கொண்டபடியால் 'கோபமுள்ள இடத்தில்தான் குணமும் இருக்கும்' என்று துணிந்து இன்று தங்களிடத்தில் விடை பெற்றுச் செல்லவந்திருக்கிறேன்! உத்தரவு செய்தருள வேண்டும் ஆண்டே!

[வேதியர் சிறிது புன்சிரிப்புடன் தலையை அசைத்துக் கொண்டு]

நந்தா! நான் கோபிப்பதெல்லாம் உன்னுடைய நல்ல காலத்திற்காகத்தான்! அதிருக்கட்டும்; நீ எங்கே போக உத்தரவுதர வேண்டுமென்று இப்பொழுது என்னைக் கேட்கிறாய்?

நந்:—ஆண்டே! சிதம்பரத்திற்கு!

வேதி:—ஏன்? அங்கே யாரும் உனக்குப் பந்துக்கள் அல்லது சிநேகிதர்கள் இருக்கிறார்களோ?

நந்:—எனக்கா! எனக்கு ஒரு பந்தமும் இல்லை!

வேதி:—பின்னே அப்படி இருக்க நீ ஏன் அடிக்கடி வந்து சிதம்பரம் போகவேண்டு மென்று கேட்கிறாய்?

நந்:—ஆண்டே! கோபித்துக்கொள்ள வேண்டாம்; சாமி தரிசனத்திற்கு. சமுகத்தில் நேற்றே கேட்டிருக்கிறேன்.

வேதி:—சாமியா! அது என்னடா சாமி! சாமியாவது பூதமாவது!

அகிலப்ரபஞ்சம் என்ற மெட்டு.

இராகம்-தேசிகமுகாரி தாளம்-ஆதி.

கண்ணிகள்.

சாமி என்பதுமிந்தத் தரணிதானன்றி வேறு
சாஸ்திரத்திலும் கிடையாதே-நந்தா
சகலமும் தெரிந்தநீ சமயமும் மறிந்தநீ
சற்றேனும் பிரமை அடையாதே (சா)

மண்ணை உழுது நட்டால் மாரிபொழிந்து போகம்
மங்களமாய் விளைவு காணும்-நந்தா
வஞ்சனையின்றிச் செல்வம் வந்து குவியுமடா
மனதிலும் தனிஇன்பம் பூணும் (சா)

உண்டாலே பசிதீரும் உறங்கினல் களைதீரும்
உலகத்தார் நிதம்கண்ட காட்சி-நந்தா
ஊக்கந்தான் நமக்காஸ்தி உணராமல் தெய்வமென்று
உளறுவார் பலபேர்கள் சூட்சி (சா)

இன்ப துன்பங்களிவை இரண்டும் மோட்ச நகரம்
இனிவேறுளதென்பது பொய்யே-நந்தா
இல்லாததை இச்சித்து இருப்பதை வெறுக்காதே
இரகசியஞ் சொல்லிவைத்தேன் மெய்யே (சா)

நந்தா! நான் உனக்கு உள்ளது உள்ளபடி கூறிவிடுகிறேன். அதை நீ உறுதியாக நம்பிக் கொள். ஜாதியில் மிக இழிந்த உனக்கு நான் இந்த இரகசிய உபதேசத்தை இயம்பவும் கூடாதுதான். என்றாலும் உன்மீது எனக்கேற்பட்டிருக்கிற அன்பை முன்னிட்டு உபதேசிக்கிறேன். நாமிருப்பது இந்த உலகத்தில்! இந்த உலகமில்லை எனில் நாமும் நமக்கு இதத்தையே செய்துவருகின்ற சகல வஸ்துக்களும் இல்லையென்பது மெய்தானே! இனி இந்தஉலகத்தைவிட வேறு ஒரு உலகம் உண்டா? இருந்தால் கொண்டா! அதில் இருந்து கொண்டு ஒருவேளை இந்த உலகத்தை வேண்டுமென்றால் வெறுத்து விடலாம். உள்ளங்கை நெல்லிக்கனி போல நமது கண்ணுக்குப் பிரத்தியட்சமாகத் தோன்றி நின்று நம்மையும் சுமந்து நின்று நமக்கு வேண்டிய பிரியமுள்ள சகல வஸ்துக்களையும் தன்னிடத்திலிருந்தே கொடுத்துக்கொண்டு வருகிற இந்த உலகத்தைப்பொய் என்று தள்ளி இல்லாத ஒன்றைஉண்டென்று கற்பித்து "அதுதான் கடவுள், அதுதான் மோட்சம், அதுதான் இன்பம், அதுதான் ஆனந்தம், அதுதான் பிறப்பிறப்பற்ற பேரானந்தம்" என்று பிதற்றித் திரிகின்ற பித்தர்களின் கற்பனையை நீ நம்பாதே! வீணாக நின் வாழ்வினைக் கெடுத்துக் கொண்டு வெம்பாதே! இங்கு இனி நில்லாதே! சிதம்பரம் என்று சொல்லாதே. சீக்கிரம் போ சேரிக்கு! நான் போகவேண்டும் ஏரிக்கு; அப்புறம் பத்து மணிக்குள் செல்லவேண்டும் கச்சேரிக்கு.

நந்:—ஆண்டே! அப்படியானால் மனப்பூர்த்தியாகத் தெய்வம் இல்லை என்று நீங்கள் உண்மையாகக் கூறுகிறீர்கள்?

வேதி:—ஆம்! அப்படித்தான்! இரட்டித்த மடங்கில் கூறுகின்றேன். பயித்தியகாரா! பண்ணையைக் காப்பாற்ற இப்பொழுதே ஓடு; பிழைக்கிற வழியைத் தேடு. இனிப் பேசாமல் வாயை மூடு.

நந்:—ஆண்டே! உலகம் உலகம் என்றும் உலகமே மெய் என்றும் உறுதி கூறுகிறீர்கள். அத்வைத வஸ்துவாய் எங்கும் பரிபூரணமயமாய் நின்று நிலவிக்கொண் டிருக்கிற சாட்சாத்கார பிரமமொன்றிலிருந்தே இப்படிச் சூரியன், சந்திரன், தண்ணீர், தரை, பகல், இரவு, வெயில், மழை, உஷ்ணம், சீதளம், கோபம், பொறுமை, மகிழ்வு, விசனம், ஜனனம், மரணம், நன்மை, தீமை, மோட்சம், நரகம் எனத்துவிதப் பட்டு நமக்குத்தோற்றுகிறது. இத்தோற்றம் கிளிஞ்சிலில் வெள்ளியும் கானலில் நீரும் கயிற்றில் அரவும் தோற்றுவதுபோல் பொய்த்தோற்றம் என்று பெரியோர் கூறுகிறார்களே! கயிறு கயிறாயே இருக்கத்தோற்ற மாத்திரம் அது அரவாகத் தோற்றுவதுபோல் பிரமம் பிரமமாயிருக்கத் தோற்ற மாத்திரம் அது உலகமாகத்தோற்றுவதன்றி அத்தோற்றம் உண்மையன்றல்லவா?

வேதி:—ஆம்! பெரியோர் கூறுகிறார்கள்! "எல்லாமிருக்கிறது பெட்டியிலே நான் இரந்து குடிக்கிறது சட்டியிலே" என்றானும். அதுபோல வேலையினக்கிட்ட பெரியோர்கள்விதவிதமாகக்கூறியிருப்பார்கள். அப்படி எல்லாவற்றிலும் நிறைந்து எங்கும் பரிபூரணமாயிருக்கிற கடவுள் காட்கிக் கன்னியமாயிருப்பானேன்? இது பெரிய விஷயம். இதைப்பற்றிப் பேச இது நேரமில்லை. எனக்குப் பிரவிர்த்தி அதிகமாயிருக்கிறது; உனக்கும் சேரியில் அதிகவேலை இருக்கிறது! இன்றுபோ நாளை வா கூறுகிறேன்.

[வேதியர் வீட்டுக்குள் சென்று விடுகிறார். நந்தனார் நாளைவருவோமென்று ஈஸ்வர தியானத்தோடு ஆதனூர் செல்லுகின்றார்]

ஸ்யாம சுந்தராங்க என்ற பிளேட் மெட்டு.

இராகம்-தன்யாசி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஆடியபாதந்தான் மனமே ஆத்மசாதனமே
அதி-ரக-சிய-சிதம்-பர-மதில் (ஆ)

அமரர்கள் அனுதின மடிதொழ பாவிய பிரணவ தொனி எழ (ஆ)

சந்தம்.

அருவாய் உருவாய் அனைத்தினுங் கருவாய் திருவாய் உதித்திட (ஆ)
அஞ்செழுத் தாதர வாக்கிக் குஞ்சித மாகவுந் தூக்கி (ஆ)
அரி அயன் மகிழ்ந்திட தெரி உமை புகழ்ந்திட (ஆ)
அம்பலத்தி லேஇருந்து நம்பகத்தி லேயிருந்து (ஆ)
அங்க மெங்கி னுங் குலுங்க மங்க லந்தி கழ்ந் திலங்க (ஆ)
அற்புதமாய் சிற்சபையில் அரஹரசிவசிவசாம்பவ
தற்பரனார் நிர்த்தனமாய் ததிங்கிணத்ததிங்கிணத்தோம் மென (ஆ)
அண்டபகி ரண்டமெலாம் அணுவினுக்கணுவாகியபரன்
குண்டலமுருண்டுபினும் குழையொடுபொருந்திய வகையினில் (ஆ)
அடியார்வினை படிமீதினில் பொடியாகிட நெடிதாகவே (ஆ)
ஆண்டவனார் பூண்டரவம் மீண்டசையத் தாண்டவமாய் (ஆ)

அநுபல்லவி.

கோடி கோடியா யிருந்து மென்ன
கொடிய பிறவி தொலைந்து முன்ன (ஆ)

சரணம்.

காலமெல்லாம் நீ பாடே பட்டாய்
கண்டதென்ன பேய் மாடே கெட்டாய்
சிலமடைய வேணுமென்றால்
செந்தமிழ்ப் பார்ஸ்கர கிருஷ்ணர்ப ணிந்து வணங்கிடு தில்லையில் (ஆ)

[நந்தனர் ஆதனூர் சென்றதும்
பன்னிருவரும் அவரை அணுகி]

நந்தனாரே! அன்று நம்ம ஜாதியாரெல்லாம் ஆடுவெட்டிப் பொங் கலிட்டு சாமிகும்பிடும் போது நீர் வந்து சாமியாடியை அடித்துத் தொந்தரவு செய்ததைப் பற்றி எல்லோரும் நம்து வேதியரிடத்தில் போய் முறையிட்டார்களாம், அவர் உம்மைக் கண்டிப்பதாகவும் உம்மோடு சேர்ந்த எம்மைத்தண்டிப்பதாகவும் சொல்லிக் கோபித் துக் கொண்டாராம். நீர் வேதியர் வீட்டுக்குப் போயிருந்தீரோ?

நந்:—ஆம்! போயிருந்தேன்; அவர் என்னைக்கண்டித்தார்; ஆயினும் நான் அவரடி பணிந்து நின்று இகம்பரம் என்கிற சிதம்பரம் போகவேண்டுமென்று அவரிடம் அநுமதி கேட்டேன்!

பன்:-அப்படியா! ஆனல் அவர் உமக்கு அனுமதி கொடுத்தாரா?

நந்:—இல்லே! எப்படியாவது அனுமதி பெற்று நான் சிதம்பரம் போகப் போகிறேன். நீங்களும் வருகிறீர்களா?

பன்:—நந்தனரே! நாங்கள் என்ன சொல்லுவோம், உமக்குத் தெரியாத விஷயமா நாங்கள் சொல்லப் போகிறோம்!

நந்:—என்ன! சொல்லுங்களேன் கேட்கலாம்!

பன்:—ஒன்று மில்லே! எங்களுக்கு ஒரு சந்தேகம் அதாவது;

முங்கிமுழுகிற என்ற மெட்டு.

இராகம்-தன்யாசி-தாளம் ஆதி.

பல்லவி.

அங்கிங்கெனுதபடி அனேத்துமுள பரஞ்சோதி
ஆலயங்களில் தான அமர்ந்தார் ஈதென்ன நீதி (அங்)

அநுபல்லவி

தங்கும் பிரகாசமாய் சாட்சாத் கார பிர்மமாய்
தானே தானுய் உலகாய் சர்வாதார மர்மமாய் (அங்)

சரணம்.

மண்விண் நீர்நெருப்புக்காற்று மாபூதமைந்தினிலும்
மனம் புத்தி சித்தம் உள்ளம் மமகாரபந்தத்திலும்
பெண்ணுண் எனும்பெரிய பேதாபேதத்தினிலும்
பேணும் பாஸ்கரகிருஷ்ணர் பிரணவ போதத்திலும் (அங்)

நந்தனரே! எங்களுக்கு இது ஒரு பெரிய சந்தேகமாக இருக்கிறது. மேலும் சிதம்பரத்திலே நடித்தருளிய சிவபரமனர் நமது இதம்பரத்திலே இருந்தும் நடிக்கின்ருரென்று இதற்குமுன் பல தடவைகளில் தாமே எமக்கு உபதேசித்து மிருக்கின்றீரே?

[நந்தனர் புன்சிரிப்புக் கொண்டு ஆனந்தக்கண்ணீர் சொரிந்து அவரது வினவின் வினயத்தை வியந்து]

ஆம்! அன்பர்களே! அது உண்மைதான்; "உடலாயுயிராயுலகமதாகிக் கடலாய்க் கார்முகினீர்பொழி வானய் இடையாயுலப்பிலி எங்குந்தானகி அடையார் பெருவிழி அண்ணனின்ருனே" என

மூலமந்திரம் கூறுகின்றதல்லவா? நீங்கள் கருதுவதும் ஒப்புக்கொள்ளத் தக்க ஒன்றுதான். என்றாலும் ஒரு பசுவினிடத்தில் அதன் சரீரமெல்லாம் பால் பரவி நின்றாலும் அதன் மடியினிடத்தில் தானே அது பால் மயமாக நமக்குச் சுரந்தளிக்கிறது. அதுபோலவே எல்லாவிடத்திலும் ஈச்சுரன் விறகில் தீபோல் விரவிநின்றாலும் தலங்கள் தோறும் அன்பர்மாட்டு ஆமடிப்பால்போல் வெளிப்பட்டருள்கின்றான். ஆகவே நான் நாளைப் போக நிச்சயித்திருக்கிறேன். வருகிறீர்களா!

பன்:—நல்லது நந்தனாரே! நீர் சென்று சிதம்பர நடேசனைச் சேவித்து வாரும். நாங்கள் "உம்மையே சேவித்தால் போதும், அந்த நடேசனைச் சேவித்த மாதிரி தான்" என்று நினைக்கிறோம்.

நந்:—நல்லது! எதற்கும் நான் இன்னுமோர் முறை நம்மை அடிமை கொண்ட வேதியரிடம் சென்று உத்தரவு பெற்று வருகிறேன்.

[நந்தனார் மறுநாள் காலை வேதியர் வீடு வருகிறார்]

ஆண்டே! நமஸ்காரம்! அடியேனைக் கருணையுடன் நோக்கி அனுக்கிரகித்து ஆசீர்வதிக்க வேணுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வேதி:—ஏன்! எதற்காக.

நந்:—அடியேன் சிதம்பரம் செல்லுவதற்காக!

வேதி:—அட பயித்தியமே! நேற்றுப் பூரா உனக்கு ஓதினேனே! அவ்வளவும் விழலுக்கிறைத்த நீர் தானோ?

நந்:—ஆண்டே! "பரகதி இருக்க இல்லை என்போர்கள் நரகதி செல்வது ஞாலமறியும்" என்று ஞானிகள் கதறுகின்றார்கள். பாரமார்த்திகத்தில் சுத்த சைதன்னிய வஸ்துவான பிரமத்தைத் தவிர அன்னிதாயுள்ள அனைத்தும் மித்தையே!

வே:—அப்படியா! ஆனால் மித்தை என்பது என்ன?

நந்:—மித்தை என்பது இல்லது உள்ளதுபோல் தோற்றப்படுவது.

வே:—இல்லது உள்ளதுபோல் தோற்றப்படுவது எப்படி? அப்படித்தா னென்றாலும் அது பொய்தானே?

நந்:—ஆம் அது பொய்தான்!

வேதி:—அப்படியானால் மெய் என்பதுதான் எது?

நந்:—சுத்த சைதன்னிய வஸ்துவான பிரமமே!

வேதி:—அப்படியானால் அது என் பிரத்தியட்சப் பிரமாணத்திற்கு எட்டாமல் மறைந்திருக்கிறது?

நந்:—மித்தையினாலேதான் அப்படி மறைந்திருக்கிறது.

[வேதியர் வயிறுகுலுங்கச் சிரித்து]

ஏண்டா பயித்தியமே! முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைத்த கதையாயிருக்கிறது உன் கதை! சொல்வார் சொன்னாலும் கேட்பார்க்கு மதி எங்கே போச்சுது. ஏண்டா நந்தா! எங்கேயாவது மெய்யைப் பொய் மறைக்குமா! நீ கேள்விப்பட்டேனும் இருக்கிறாயா? இது என்னடா புதுமையா யிருக்கிறது!

நந்:—ஆண்டே! இது புதுமையல்ல! எவருக்கும் அனுபவமே! அதாவது மெய்யான கயிறு அரவாகத்தோற்றப்படும் போதும் அது கயிறு கயிறுதானே! கயிற்றிற்கு ஏதும் பின்னமில்லையல்லவா! அது போலவேதான் பிரமத்தினிடத்திருந்து மித்தை தோற்றப்பட்ட போதும் பிரமம் பிரமமே! இன்னும் வெளிப்படக் கூறுவதாயிருந்தால் பிரமம் காரணம்; உலகு காரியம்; காரியம் எக்காலத்திலும் பொய்தானே? இவ்வளவு என்! நமது உயிரே நமக்குப் பிரத்தியட்சமாகக் காணப்படவில்லை. அதற்காக "உயிரே இல்லை" என்று சொல்ல முடியுமா?

வேதி:—அடே! இது சரியான கேள்வி தான், முடியாதுதான்; என்றாலும் இவ் விஷயத்திற்கு ஏதாவது பிரமாணமுண்டா?

நந்:—உண்டு. "மரத்தை மறைத்தது மாமதயானை; மரத்தில் மறைந்தது மாமதயானை (அதுபோல்) பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்; பரத்தில் மறைந்தது பார்முதல் பூதம்" என்று மூலமந்திரம் உபதேசிக்கிறது.

வேதி:—நல்லது அப்படியானாலுந்தான் என்ன! தேவராதி யாவருக்குமே எட்டாத அந்தப் பிரமம் கீழ்ச்சாதியிற் பிறந்த உனக்குத்தானா எட்டப் போகிறது! அடபித்தா!

நீ நினைக்கிற நினைப்புக்கிங்கிது என்ற மெட்டு.

இராகம்-சுருட்டி தாளம்-ஆதி.

கண்ணிகள்:

அட:—பித்தனும்நீ உன்னோடெனக் கென்ன பேச்சடா-நான்
பேசினாலும் ஊர் சிரிக்கும் மிக்க ஏச்சடா-உன்னை
வைத்துக்கொண்டு நான் மாரடிக்கக் காலமாச்சடா-நல்ல
வளம் மிருந்த நன்செய் புன்செய்கள் வாடிப் போச்சடா(பித்)

அட—நானுமுனை நம்பிவிட்டது நானூறு வேலி-அதில்
நாட்டமின்றி வேறுனக்கிங் கென்னதான் சோலி-அட
ஈனசாதிப் புலையர்களுக் கேற்றது கூலி-அப்பா
இப்படிநீ கெட்டுப்போன தேனே குணசாலி (பித்)

அட—அறுவடைக்குக் காலங்கூட அடுத்து விட்டது-நந்தா
ஆனலதில் பாதிக்குமேல் அழுகிக் கெட்டது-நான்
பொறுத்துக் கொண்டேன் ஏனென்முல்நீ கையால் தொட்டது-அது
பொன்விளையு மென்பதெனது மனதில் பட்டது(பித்)

அட—தோட்டந்துரவு காடுகரைகள் தொழிலைப் பாரடா-உனக்குத்
தொந்தமுள்ள தெய்வங்களைத் தொழுது நேரடா-வீண்
சேட்டையிது வேண்டாம் தேடிச் செல்வம் சேரடா-நீ
செயலழிந்தால் உனக்குதவி செய்வ தாரடா(பித்)

அட—இந்தாநீ எழுதிக் கொடுத்த அடிமைச் சீட்டு-உன்
எண்ணத்திலே வைத்துக்கொண்டென் சொல்லைக் கேட்டு-அப்பா
நந்தா நீ இனிமேலாவது நன்மை பாராட்டு-ஊரில்
நாலு பேர்கள் நடப்பதுபோல் நடப்பதே தேட்டு(பித்)

அப்பா! நந்தா! எந்தெந்த நிலங்களுக்கு எப்படி எப்படி உரம் போடவேண்டுமோ அப்படி அப்படிப் போட உனக்கு நன்றாய்த் தெரியும். நீ கவனியாமல் இருப்பதினல் எனக்கு நஷ்டம் அதிகந் தான். உன்னுடைய நன்மையைக் கருதியே நான் ஒன்று சொல்லுகிறேன். என் வார்த்தையைத் தட்டாதே!

நந்:—ஆண்டே! அந்த ஒன்றுதான் நானும் விரும்புகிறேன்.

வேதி:—எந்த ஒன்றை நீ விரும்புகிறாய்?

நந்:—ஒன்று ஒன்று என்கிற ஒன்றைத்தான்!

வேதி:—அதிருக்கட்டும்; ஒன்று என்றால் அதன் பொருள் என்னவென்றுதான் நீ நினைத்திருக்கிறாய்?

நந்:—ஒன்று என்பதின் பொருள் சேர், கூடு, கல என்றாகும். நட, வா, போ என்பதுபோல முன்னிலை ஏவல் வினை. அதேபொருளில் இருந்துதான் பின்னர் அது எண்ணளவையாகு பெயராய் ஏதாவது ஒரு பொருளைக் குறித்து நிற்கும். ஒன்றுதான் பலவாயிற்று என்பதற்கு இதுவும் ஒரு முக்கிய உதாரணக்

தான். இதிலிருந்து தோன்றினவைகள்தான் இரண்டு மூன்று நான்கு ஐந்து முதலிய எண்ணுப் பெயர்கள் அனைத்தும்.

[வேதியர் சிரித்துக்கொண்டு]

நந்தா! நீ இருக்க இருக்கப் பெரிய அதிகப்பிரசங்கியாய் விட்டனை.

மேலக்காட்டு வயல்கள் சுமார் நூறு வேலி வரையிலும் சரியாகத் தண்ணீர் ஏறாமல் அப்படியே காய்ந்து கருகிப்போய்க் கிடக்கிறது. கீழ்சருகு வயல்களில் சில சில தண்ணீர் அதிகம் பாய்ந்து அழுகியும் விட்டது. இவைகளெல்லாம் சரியாக விளைந்து நஷ்டமில்லாமல் பலனளிக்கும்படி செய்யாமல் போனாயானால் உன் முதுகுத் தோலை வாங்கிப் போடுவேன் பயலே! என்ன கெட்டுப் போனாய்! இனி இங்கு நில்லாதே! போதும் உன் உபதேசம் போ!

[வேதியர் கண்கள் கோவைப் பழம் போல் சிவந்துவிடுகிறது. நந்தன் பயந்து விலகி நின்று நமஸ்காரம் செய்துவிட்டு ஆதனூர் வருகிறான்.]

கட்டிக்கரும்பே செந்தேனே என்ற பிளேட் மெட்டு.

இராகம்-அடாணா. தாளம் ரூபகம்.

பல்லவி.

நம்பிக் கொண்டே இருந்தேனே-நானே
நம்பிக் கொண்டே இருந்தேனே
நளினத் திருவடி நானே (நம்)
நடராஜனே உனை அனுதினம் (நம்)

சந்தம்.

நாளைப்புகலாம் திருவடி தாளைப்பெறலாம் எனும்படி (நம்)
உனது-நடனப்பதமெனக்குத் தரத் தடையித்தனை எதற்கையனே()
வீணாய்-நாளும் போகிறதுன திருதாளுந்தான் துணை அனுதினம்(நம்)
இனி—நாடேன் பவ சாகரத்தை விடேன் உனதோர் பதத்தை(நம்)
நல்லார் முனிவர்கள் பரவிய தில்லைச் சிதம்பர தரிசனம் (நம்)
நற்றம்பன மெட்டும்படி சிற்றம்பலங் கிட்டும்படி (நம்)
நாத வேத போத முற்று ஜாதி பேத மேது மற்று (நம்)
நச்சரவணிந்த தானம் உச்சிதப்ரதான மோனம் (நம்)
நாடும் முக்தியை என்றும் தேடும் பக்தியில் நின்றும் (நம்)

அநுபல்லவி.

கும்பிட்டும் வேதியர் கொடேன் விடை என்றிட்டார்
கோபித்துப் போவென்று கூறி அகன்றிட்டார் (நம்)

சரணம்.

பொன்னடித் தஞ்சமாய்ப் போற்றியும் புண்ணியம்
புலைய னெனக்குப் பொருந்தாதோ கண்ணியம்
சன்னிதானச் சேவை தந்தாள்வாய் இது சமயம்
சந்தத்தமிழ்க் கிருஷ்ண பாஸ்கரர் சிந்தித்திடும் சிருஷ்டி சால்பதம் (நம்)

ஹே ஜெகதீசா! திருச்சிற்றம்பலவாசா! தில்லை நடராஜா! கடவுளை நம்பினார் கைவிடப்படார் என்ற பழமொழி மெய்யன்றோ! ஜகத் வெறுந்தோற்றம் என்பது கண்டேன். மெய்யான உனது திருவடியைக் காண விருப்பங் கொண்டேன். மாயை என்கிற நீரிற்கிடந்து நீந்தியுழல இனி அஞ்சேன். என்னை அடிமை கொண்ட வேதியரிடம் என்னுடைய நிலைமையைப் பல தடவைகளில் விண்டேன். அவர் உத்திரவு எனக் கிதுவரையும் கிடைக்கவில்லை. சர்வேஸ்வரனாக இருக்கிற நீ அவர் மனதில் இருந்து என் விஷயத்தில் கிருபை கிடைக்குமாறு அருள்புரியக் கூடாதா! "அன்புஞ் சிவமு மிரண்டென்பர் அறிவிலார்; அன்பே சிவமாதல், ஆருமறிந்திலார்; அன்பே சிவமாதல் ஆருமறிந்தபின்; அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே" என்று மூலமந்திரம் முறை இடுகிறதே! "அறுவடை தீரட்டும் பின்னர் பார்த்துக்கொள்ளலாம்" என்றார் வேதியர், அதுவரை இந்த யாக்கை நிலைதிருப்பது என்ன நிச்சயம்! இதுவோ நீர்க் குமிழி. முடிசார்ந்த மன்னரும் மற்று முள்ளோரும் முடிவிலொரு பிடிசாம் பராயழிந்தொழிவது கண்கூடாக்கண்டு வருவதுதான்.

வரசிகிவாகன என்ற மெட்டு.

இராகம்-சுப்பிரதீபம் தாளம் ஆதி.

பல்லவி.

நடன சதா சிவா நாத மஹா தவா
நவிலாதி மந்த்ர போத நளின குஞ்சித பாத (நட)

அநுபல்லவி.

உடலிது மாயம் உணரி லபாயம்
உனதருள் நாடினேன் உயரன்பு தேடினேன் (நட)

சரணம்.

சாஸ்வத காரணா　　　　சர்வஸம் பூரணா
சகலமும் தானே தானாய்　　சமட்டி வியட்டி யானாய்
பாஸ்கர கிருஷ்ணர் சதா　　பாடிப் பரவும் பதா
பரம நல் விதம்பரா　　　　படி புகழ் சிதம்பர (நட)

[நந்தனார் அங்ஙனமே அயர்ந்து நித்திரை புரிகின்றார். சிவபிரான் அவர் சொப்பனத்தில் சேவை சாதிக்கின்றார். உடனே நந்தனார் விழித்தெழுந்து வியப்புறுகின்றார்.]

மோகங் கோள்ளத் தருணமல்லவே என்ற மெட்டு.

இராகம்-தன்யாசி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

கடவுள்வரக் கனவு　　நான் கண்டேன்-இனிக்
கவலை அண்டேன்　　　　(கட)

அநுபல்லவி.

உடலெடுத் தெடுத்திளைத்தேன் உற்றஜென்மம் கோடிகோடி
உண்மைஞானம் உதயமாகியே　　நான் உய்யநாடி (கட)

சரணம்.

செடிகொடியாய்ச் சேயாய்த்தாயாய் சிரழிந்தேன்போதும் போதும்
சிதம்பரச் சிற்சபையிலாடிய　　தனிச் சிவமென்றோதும் (கட)

புண்யமொன்றுஞ் செய்தறியேன் புதுமையுமிங் கென்னேஎன்னே
பொய்யுடம்பைப் போற்றியே நின்ற இப் புலையன் முன்னே (கட)

எழுவகையில் நான்தோன்றாத　　இழிபிறவி ஏதுமுண்டோ
இனி இவனுக்கருள் புரியலாம்　　என இரக்கங் கொண்டோ (கட)

பாஸ்கர கிருஷ்ணர் சதா　　பாடிப்பாடித்துதி பயின்ற
பஞ்சபூத நாத போதமாய்　　எங்கும் பரவிநின்ற (கட)

ஆஹா! இன்று நான் கண்ட கனவு அது கனவுதானோ அல்லது நினவுதானோ! கனவாயிருப்பினும் நினைவாயிருப்பினும் பலன் ஒன்றுதான். காரணமாகிய பிரம சைதன்னியத்தினிடத்திருந்து காரியமாகிய உலகு பித்தை. அதாவது இல்லாதது உள்ளதுபோலத் தோற்றுவது. அதுபொய் என்பதற்கு உதாரணமாகச் சொப்பன உலகத்தை அல்லவா சுருதிகள் கூறுகின்றன. "ஜாக்ரப

தெல்லாம் சொற்பனம் போலு மென்றே துணிந்தவன் ஞானி யாவான்'' என்றபடி சாக்கிர நிலையில் சொப்பன உலகும் சொப்பன நிலையில் சாக்கிர உலகும் பொய்தானே ! மேலும் சாக்கிரம் சொப் பனம் சுழுத்தி இம்மூன்று நிலைகளில் அபிமானமே பந்தமெனப் படுகிறது. என்றாலும் தில்லை நடேசர் என் எதிரில் வந்து என்னை ஆசீர்வதித்து "நீ சிதம்பரம் வந்து சேர்வாய். அவ்வாறு வருதற்கு உன்னை அடிமைகொண்டுள்ள வேதியர் இனி உனக்கு விடை கொடுக்கும்படி அவரது நிலங்கள் முழுதும் நல்ல விளைவு காணு மாறு நான் அனுக்கிரகஞ் செய்திருக்கிறேன். அவற்றை உனது வேதியரைக் கூட்டிக்கொண்டு வந்து காண்பிப்பாயாக'' என்று கூறி யும் மறைந்தனர். நல்லது நான் சென்று பார்க்கிறேன்.

[நந்தனார் சென்று நிலங்களை எல்லாம் சுற்றிப் பார்க்கின்றார். சொப்பனத்தில் கடவுள் காட்டியபடி இருக்கக்கண்டு தாண்டவ மாடிக்கொண்டு ஓடோடியும் வருகின்றார்.]

சுதேசியத்தால் ராட்டினத்தை என்ற மெட்டு.

இராகம்-சிங்களம் தாளம்-ஆதி.

கண்ணிகள்.

பிறப் பிறப்பிங் கினிமே லில்லை பீடை விட்டது-நல்ல
பேரின்ப நிலை அடையும் பேறு தொட்டது

மறப்பு நினைப் பென்பதுமோர் மானங்கெட்டது-பொல்லா
மாயையில் தான் நானிப்படி மாறுபட்டது

பின்னும் இதிலென்ன சூட்சி-அந்தப்
பிரமந்தா னொரு சாட்சி

தன்னையும்-தனக்கா-தாரத்-தலைவனையும்-தனியே கண்டேன்
தானே தானும் நானே நானும் சார்ந்து நல்லமிர்த முண்டேன்
சந்தத்தமிழ்ப் பாஸ்கரகிருஷ்ணர் சாற்றிவைத்த தேற்றத்திலே

தற்பர சிற்பம் நானே நானே
சத்தியம் சத்தியம் பேஸ் பேஸ் (பிற)

[தாண்டவ மாடிக்கொண்டே
வேதியர் முன் வந்து நின்று]

ரெங்க நாயகமே என்ற மெட்டு.

இராகம்-பிலஹரி தாளம்-ரூபகம்.

பல்லவி.

மருந்திருக் கின்ற தையே-என்னை
வாட்டிய பித்தத்தை ஓட்டிச் சுகந் தர (மரு)

அநுபல்லவி.

அந்த-வானுட-இந்த-மண்ணுட-வந்த-ஊனுட-மன்றி-னுள்ளாகின்ற (மரு)

சரணம்.

அருந் தவத்தார்க் கன்றி யாருக்கும் கிட்டாது
ஆசைக் காற்றில் பஞ்சாய் அலைவோர்க்கோ எட்டாது
பொருந்துவார் உண்டாலோர் போதுந் திகட்டாது
பொன்ருது வடிவில் குன்ருது உலகில் ஒன்ருது முடிவில் கன்ருது நிலவும் ()

நான் நீ எனு முபாதி நழுவினல் நிரந்தம்
நல்லவ ருள்ளத்தில் நடனமே பரம்பரம்
தேன்மிகத் தித்திக்கும் தில்லைச் சிதம்பரம்
தீயாது வெயிலில் தோயாது வினையில் தேயாது பிணியில் மாயாதுமுடிவில்(ம)

பார்வதி தேவியார் பாதியுண்டார் மீதி
பாஸ்கர கிருஷ்ணர் தம் பக்திக்குத்தான் ப்ரீதி
சாஸ்வதமாக நான் சார்ந்து பார்த்தால் ஜோதி
சாரும் பிறவியே தீரும் பாலுடன் நீரும் போலொன்று சேரும் பேரின்ப(மரு)

ஆண்டே! எனக்கு ஏதோ பித்துப் பிடித்துவிட்டதென்று தாங்கள் கூறினீர்கள். அந்தப் பித்தந் தீர்வதற்காக எங்கேனும் மருந்து இருக்குமோ வென்று செல்லாத விடமெல்லாஞ் சென்று சென்று தேடிப் பார்த்தேன். மருந்து எங்கும் கிடைக்கவில்லை.

ஆனல் என் பித்தந் தெளிவதற்குத் தில்லைச் சிதம்பரத்தில் சிற்றம் பலத்தினுள் எல்லாம் வல்ல ஒரு நல்ல மருந்திருக்கிறது. ஆகவே அங்கு நான் செல்ல விடைதர வேண்டும்.

[வேதியர் மிகவும் கோபமாக]

ஏனடா நந்தா! நீ என்ன நையாண்டி கிய்யாண்டி பண்ணுகிருயா என்ன! பித்தம் அதிகமாய் விட்டது என்று நான் சொல்ல நீ "அதற்கு மருந்தே கிடைக்கவில்லை, ஆனல் சிதம்பரத்திலே

பேரின்ப மன்றினுள்ளே மாத்திரம் இருக்கிறது" என்று ஞானோபதேசம் பண்ணுகிறாயே! நல்ல இஞ்சியைக்கொண்டுவந்து நைய நறுங்கத் தட்டி அரைக்காற்படி சாறு எடுத்து அப்படியே சாப்பிட்டால் பித்தம் இருக்கிற இடம் தெரியாமல் பறந்து போகும். இது தெரியாமல் நீ ஏதேதோ கன்னு பின்னு வென்று

சொல்லச் சொல்லக் கேளாதென்ன என்ற மெட்டு

இராகம்-காம்போதி. தாளம்-ஆதி.

பல்லவி.

என்னென்னமோ சொல்லுகிறாய் நந்தா-உனக்கிது
ஏற்காது இந்தா -இது மெத்தக் கேலி (என்)

அநுபல்லவி.

சின்னச்சாதி பெரியசாதி
சீர் சிறப்பு தேசாசாரம்
முன்னவர் பின்னவர் இல்லையா
மூடா எனிதில் வீண் விசாரம் (என்)

சரணம்.

தில்லை என்று சொல்லாதே செல்லங் காட்டி நில்லாதே
கல்லைவைத்துக் கும்பிடு நெல்லைப்புல்லை நம்பிடு
எல்லாரும் மனிதரா கல்லார்க்கறிவேயிரா
பல்லைக்காட்டிக் கெஞ்சாதே தொல்லை வரும் மிஞ்சாதே(என்)

மேற்குலத்தில் உற்றையா வேத சாஸ்திரங் கற்றையா
பாற்குலம் மறந்தாயே பறையனாய்ப் பிறந்தாயே
நூற்புலனறிந்தாயா நுட்பங்கள் தெரிந்தாயா
மூக்கறையன் கூற்றடா முன்னோர்வழி போற்றடா(என்)

வீடு வாசல் சொத்தடா வேணுமென்று நத்தடா
காடுகரை நாடடா காணி பூமி தேடடா
பாடு பட்டுத் தின்னடா பாலுஞ்சோறு முண்ணடா
கேடு கெட்டுப் போகாதே கேலிக்கிட மாகாதே(என்)

கையில் ரொக்கந் தருகிறேன் காப்புசெய்து போட்டுக்கோ
உய்யும் வழி ஏதப்பா ஊராரைப்போய்க் கேட்டுக்கோ
செய்யும் வேலை செய்யடா சிதம்பரமும்பொய்யடா
வையகத்தில் மிக்கது வாழ்வுதானே தக்கது(என்)

வைத்திருந்தால் மட்டேத்தான் வரிசைசெப்பில் போற்றுவார்
பைத்தியங்கொண்டாலுனைப் பார்த்தோர் பழி சாற்றுவர்
குயுத்தியாகச் சொல்லவில்லை . குரங்குப்பிடி எனடா
சபிக்கினை அறியாதவன் சண்டிமாடு தானடா (என்)

தாவிமர மேறு வானைத் தாங்கு மட்டும் தாங்குவார்கள்
தட்டியேறி வீழ்ந்து கால்கை தானொடிந்தால் என்செய்வார்கள்
சாற்றினேன் தன்மை—நீ
கேட்டுக்கொள் உண்மை
காற்றிருக்கையில் முயன்று
தூற்றிக்கொள்ளல் தானேநன்மை (என்)

அடே பயலே! உன்னை நம்பி நான் இந்த வருஷம் ஏராளமான விதை விதைத்து "இலாபமோ நஷ்டமோ" என்று எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறசமயம் அதைப்பற்றி உனக்குக்கொஞ்சங்கூடக்கவலை இல்லாமல் சிதம்பரம் சிதம்பரம் என்று திரிகிறாய்! அப்படித்தானே! உன் முதலாயிருந்தால் தானடா உனக்குத் தெரியும்?

நந்:—ஆண்டே! அதைப்பற்றி நீங்கள் கவலை அடைய வேண்டாம். எல்லா நிலங்களும் பூர்த்தியாக விளைந்திருக்கிறது. இந்த வருஷம் மாசூல் அதிகம் காணும். இன்றே சென்று அறுக்கலாம்.

[வேதியர் குலுங்கச் சிரித்துக்கொண்டு]

அடே பயலே! பலே பயித்தியகாரனடா நீ! அறுவடைக்குக் காலம் இன்னும் மூன்று மாதம் இருக்கிறது! "இன்று சென்று அறுக்கலாம்" என்று தெள்ளத் தெளியச் சொல்லுகிறாயே!

நந்:—நான் சொல்லுவதில் சந்தேகமே வேண்டாம்; தாங்கள் இப்பொழுதே வந்து பார்த்துக் கொள்ளலாம் ஆண்டே!

வேதி:—அப்படியா சரி! இதோ வருகிறேன். பருத்தி புடவையாகக் காய்ச்சிருக்கிற தென்றால் அதையுந்தான் பார்த்துவிடலாமே! கெட்டிக்காரன் பித்தல் எட்டு நாளில் தெரிந்து விடுகிறது.

[வேதியர் நந்தனருடன் ஆதனூர் சென்று வயல்களைச்சுற்றிச்சுற்றிப் பார்க்கிறார்; அவை அனைத்தும் அறுவடைக்குத்தக்க வளமாக விளைந்திருக்கின்றன]

### விருத்தம்.

பயிரொரு முழமே நீளும் படைப்பைந்து கலமே காணும்
துயிலது நந்தா நின்கை தொட்டதே தங்கமாகும்
உயிரினுஞ் சிறந்த உன்னை உதாசனஞ் சொன்னேன் பாவம்
வயிரமென் மீது வேண்டாம் மன்னிப்பாய் பேந்த நானே

### சிவதீட்சாகுரு என்ற மெட்டு

இராகம்-குறிஞ்சி-தாளம்-ஆதி.

### பல்லவி.

பரமார்த்த சிவ
பக்தனும் நீயே நந்தா
பஞ்சீகரண-பிர-தா-னம-தான- (பர)

### அநுபல்லவி.

அர ஹர ஒரு ஞான பிர ணவப் பொரு ளான (பர)

### சரணம்.

சாதிமத சாஸ்திரத்தால் சாதிப்பதொன்று மில்லை
சகலமும் நானே என்ற தனிமை தான் சத்யநிலை
சோதிமயத்தாலன்றித் தொலையுமோ பாசவலை
ஞாயசாத்மீக மகி-பா- புவி-மீ-தினிலே (பர)

பறையனென்றுன்னை எண்ணிப் பலபலசொன்னேன்பாவம்
பகுத்துணர்ந்தறியாமல் படபடத் தென்ன லாபம்
குறை என்று கண்டேனப்பா கொள்ளாதே என் மேற்கோபம்
குருவாகி எனக்குப-தே- சமும்-நீ-புரிவாய் (பர)

நந்தா! நான் உன் மகிமை யறியாமற் போனேன். நீயே சிவபக்தன். இவ்வுலகிலும் ஒரு பிரசித்தன். இப்பொழுது நான்தான் பித்தன். உன் பெருமை அறிந்தவன் எவனோ அவன் முத்தன். நானோ வேதபாராயணன்; நீயோ நாதபாராயணன். நானோ மறையோதுவேன்; நீயோ பறை ஓதுவாய். உலகம் நாத வடிவென்றும் அந்நாதம் பறையுள் ஒடுங்கியிருக்கிறதென்றும் நான் அறிந்தவன் தான். என்றாலும் மறந்தவன் ஆகினேன். நானும் கடைத்தேறுமாறு கருணை கூர்ந்து எனக்குக் குருவாயமர்ந்து பரமார்த்தமென்கிற யதார்த்த ஞானத்தைப் பகுத்துணருமாறு போதித்தருள வேண்டும்.

நங்:—ஆண்டே! எனக்கு அம்பலவாணன் அருள் கிடைக்குமா?

வேதி:—கிடைக்கும்!

நங்:—கிடைக்குமாறு எனக்கு அனுக்கிரகம் புரிந்தீர்களா?

வேதி:—புரிந்தேன்!

நங்:—சரி! அடியேன் விடைபெற்றுக் கொள்ளுகிறேன்; என்னை ஆசிர்வதிக்க வேண்டும்; சென்று வரட்டுமா?

வேதி:—கூடாது!

நங்:—ஏன்?

வேதி:—ஏனு! என் பிறவி நீங்க எனக்குப் பேரின்ப நிலையை உபதேசித்தருள வேண்டாமா?

நங்:—ஆண்டே! அது மெத்தக்கடின மல்லவோ?

வேதி.—ஏன்! திதி, வார, நட்சத்திர, யோக, கரணங்களை அறியாதவர் பஞ்சாங்கத்தைப் பார்த்தாவது அல்லது கேட்டாவது அறிந்து கொள்ளுவது போலப் பஞ்சீகரண தத்வார்த்த முணராத என் போன்றார் நின் போன்ற எதார்த்த ஞானிகளிடத்துக் கேட்டறிய வேண்டியது அவசியந்தானே?

நங்:—அவசியந்தான்! அதில் ஒன்றும் ஆட்சேபனை இல்லை; ஆனாலும் அதற்குப் பரிபக்குவம் வேண்டாமோ!

வேதி:—அப்பா நந்தா! குளவியானது எப்படி ஒரு புழுவை அது பார்க்கின்ற பார்வையிலிருந்து தன்மய மாக்கிக் கொள்ளுகிறதோ அதே மாதிரி ஒரு ஞானி பரிபக்குவ மற்ற என் போன்ற அஞ்ஞானியைத் தன் மயமாக்கக் கூடுமல்லவா!

நங்:—ஆண்டே! தாங்கள் கூறுவது வாஸ்துவந்தான். அதே மாதிரி தாங்கள் தானே என்னை ஞானமயமாக்க வேண்டும்? நான் எப்படித் தங்களை ஞானமயமாக்க முடியும்?

வேதி:—அப்பா நந்தா! அப்படியல்ல! ஒரு வஸ்துவை ஓரிடத்தில் வைத்துவிட்டு மறந்து போனவன் அவன் நூறுகோடி வருஷம் அழுதழுது திரிந்தாலும் அவனுக்கு வைத்த இடம் நினைப்புக்கு வந்தாலொழிய அவ்வஸ்துவை அவன் எடுக்கப் போரவனல்ல. அதே மாதிரி ஒருவன் ஆயிரங்கோடி வருஷம் மனுஷ

சரீரம் பெற்று ஆகம சாஸ்திரங்களை எல்லாம் கற்றுணர்ந்தவன் ஆனாலும் அனர்த்தமாகிய தன் மறதியைக் கெடுத்து அறிவினாலே ஆத்மவஸ்துவை அறிந்துகொள்ளாத வரையிலும் அவன் கடைத்தேறப் போவதில்லை. நான் இப்பொழுது ஆத்மவஸ்துவை மறந்தவன்; நீ அறிந்தவன். ஆகையால்தான் நீ எனக்கு உபதேசிக்க வேணுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நந்:—அப்படி யானால் ஆண்டே!

ஆனால் அவனுக்கோ என்ற மெட்டு.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

இப்-பிரபஞ்சத் தோற்றமித்து பெருங்கவலை-இப் (பிர)

அநுபல்லவி.

தெரியேன் அடியேன் சிறியேன் சாமி-அப்-
பெரியார் சொற்படி பிரமைதான் பூமி-இப்- (பிர)

சரணம்.

கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்
கானலே நீரெனக் காட்டும் - ஒரு
கயிறது அரவென அயருற விடுவது
காணவே அதிபய மூட்டும்- விதி
காரிய மூலமெனக் கேட்டும் - மதி
காரணப்பிரமத்திற் பூட்டும் - தனி
வீரிய மமதையை ஓட்டும் - ஜெய
வீடுறு மார்க்கத்தில் நாட்டும் - இப் (பிர)

பிறப்பார் சிறப்பாய் இருப்பார் இறப்பார்
பின்முன் அனுபவங் கண்டோம் - சதா
பெண்டு பிள்ளை என மண்டு தொல்லை பல
பெறுவதுதான் தொழில்கொண்டோம்-இதில்
பேதகமே இலை விண்டோம் - பெரும்
பேய்க்கூத்தினிவினி அண்டோம் - வரும்
பாதகமாய்கையில் முண்டோம் - அந்தப்
பரமார்த்த நிலை உண்டோம் - இப் (பிர)

மானிட ஜெனனம் தானெடுப் பதுதான்
மகத்துவம் மிகவும் சிரேட்டம் - அது
மறுமையும் இம்மையும் அறிகிற உணர்வுள
மனநிலை உடையதோர் கூட்டம் - வரும்
மரணம் ஜெனனமே தேட்டம் - அது
மறதியினால் வந்த வாட்டம் - இனிப்
பரகதி பெறுவது தேட்டம் - கிருஷ்ண
பாஸ்கரர் மொழிவதே நாட்டம் - இப் (பிர)

ஆண்டே! நான் தங்கள் அடிமை! ஏதோ தெரிந்த வரையிலும் கூறுகிறேன். புகையைக் கண்டவுடன் ஆங்கு நெருப்பு உண்டு மென்று பூரணமாக நம்புவதுபோல் அழியுந்தன்மையான இப்பிர பஞ்சத்தைக்கண்ட உடன் இதில் அழிவற்றதாயும் அசைவற்றதாயும் ஒருபொருள் இருந்துதான் தீரவேண்டுமென்று நிச்சயிக்கவேண்டும். பொதுவாக ஜீவராசிகளெல்லாம் துன்பத்தை இன்பமென மயங்கிப் பலவித நிர்பந்தக் கட்டுகளில் பந்தப்பட்டு, சதா துக்கானுபவ முடையவைகளாய்க் காலங்கடத்தி வருகின்றன வென்பது அநுபவ சித்தம். ஜீவராசிகள் அனைத்தும் தெரிந்தோ தெரியாமலோ இந்தப் பந்தத்தினின்றும் விடுபடுவதற்காகவேதான் முயற்சி செய்து வருகின்றன. என்றாலும் இகபர சாதன உணர்ச்சி மனுஷ்யவர்க்கத் திற்குத்தான் உரியது. தேவர்களும் மனுஷ்யராகப் பிறந்தால்தான் முத்தி என்றால் இனி வேறு கூறுவானேன்! ஆனால் மனிதன் கரசரணாதி அவயவங்களோடு கூடிய இச் சரீரத்தையே நான் என்றும் எனது என்றும் அபிமானித்தவனாகிக் காரண, சூட்சும- தூல சரீரங்களிலே கட்டுப்பட்டு உழல்கின்றான். போதாக் குறைக்குப் பெண்டு பிள்ளை தனம் தான்யம் என்றும் பேராசை கொண்டவனாகி அவற்றினாலும் கட்டுப்பட்டு அவஸ்தைப் படுகிறான். இரவென்றும் பாராமல் பகலென்றும் பாராமல் சதா இக் கட்டுகளை எல்லாம் மேலும் மேலும் பலப்படுத்திக் கொள்ளவே அவன் பாடு படுகிறான். அஞ்ஞானக் குழியிலே விழுந்து ஆழ்ந்து அலமோதிக் கரை ஏறத் தெரியாமல் கஷ்டப்படுகிறான். "அஞ்ஞானமொன்றே எல்லாக் கஷ்டங்களுக்கும் காரணம்" என்பதை அவன் அறிந்தானில்லை. சில சமயங்களிலே அறிவு தோன்றினாலும் பாசமயக்கம் பலமாயிருக்கிற படியினாலே அவ்வறிவின் வழி நிற்க அவனால் முடிவது இல்லை. அறிவின் வழி மாத்திரம் அவன் நின்றானானால் எல்லாமே

அன் அறிவாய் அவ் அறிவே பிரமமாய் அப் பிரமமே தானய் நின்று நிலவுவான் என்பதற்கு ஐயமே இல்லை. இந் நிலைமையைத்தான் அசம்பிரமம் என்றும் முத்தி என்றும் பெரியோர் மொழிகின்றனர்.

வே:—நல்லது நந்தா! இங்குச் சில சந்தேகங்கள் ஏற்படுகின்றன; அதைக் கேட்டறிந்து கொள்ள நினைக்கிறேன்.

நந்:—ஆகா! கேட்கலாம் சுவாமி!

வேதி:—நந்தா! ஆழிய கடலில் அகப்பட்ட துரும்புக்கு "நாம் அலைகளால் மோதப்பட்டுக் கரையை அடைகின்றோம்" என்கிற நினைவும் அவ் அலைகளுக்கு "நாம் துரும்பைத் தள்ளிக் கரையிற் சேர்க்கின்றோம்" என்கிற நினைவும் இல்லாமலே அலைகளால் மோதப்பட்ட துரும்பு கரையைப் போய் அடைகின்றதல்லவா? அதுபோலவே ஜீவனுக்கு ஈஸ்வரனைப்பற்றியும் ஈஸ்வரனுக்கு ஜீவனைப் பற்றியும் எவ்வித நினைவுமில்லாமல் ஜீவன் பிறவிக் கடலாகிய ஆழிய அஞ்ஞானப் படுகுழியில் விழுந்து வினையாகிய அலைகளால் மொத்துண்டு பந்தபாசத்திற் கட்டுப்பட்டு உழன்றுகொண்டே இருக்க ஈஸ்வரனது மகத்தான ஐசுவரிய அநுக்கிரகம் ஜீவனை எப்படியும் பிறவிக்கடலிலிருந்து தள்ளி நிவர்த்திக் கரை சேர்ப்பிக்குமல்லவா?

நந்:—சுவாமி! ஆழிய கடலானது "நாம் வசிக்கும் இடம் இதுவன்றி வேறல்ல" என நினைத்து ஆங்கிருந்து ஜீவித்து வருகின்ற ஜலராசிகளை எல்லாம் அதுதானே தன்னிடத்திடங்கொடுத்து ஆதரித்து வைத்துக்கொண்டு அவ்வாறு நினைவில்லாத துரும்பைத் தானே அது கரையிற்கொண்டு தள்ளுகின்றது! அதுபோலவே "பாரமார்த்திக பிரமசைதன்யத்தைத் தவிர ஏனைய அனைத்தும் மித்தை" எனத் தெளிந்து, தானே அதுவாய் நிற்பானுக்கன்றி மற்றவனுக்கு நிவர்த்தி என்பது எவ்வாறு கிடைக்கும்?

வேதி:—நந்தா! இதுவரை நீ கூறிவந்த விஷயங்களினால் நான் பிரம்மாபரோட்ச ஞானமடைந்தேன். என்றாலும் ஒருவன் சற்குருவை அடைந்து உபதேச வாயிலாகக் கேட்டறிந்து கொள்ளாதவரையிலும் அவனோடு அசம்பாவித விபரீத தோஷங்கள் ஊடாடி அவனடைந்த ஞானம் திடப்படாமல் நழுவுவதற்கேதுவாமென்று மிகவும் பயப்படுகிறேன். மேலும் "புகையைக் கண்டவுடன் ஆங்கு நெருப்பு உண்டுமென்று பூரணமாக நம்பு

வதுபோல் அழியுந்தன்மையான இப் பிரபஞ்சத்தைக் கண்டவுடன் அதில் அழிவற்றதாயும் அசைவற்றதாயும் ஒரு பொருள் இருந்துதான் தீரவேண்டுமென்று நிச்சயிக்க வேண்டும்" என்று தெரிவித்தாய். அழியும் தன்மையும் அழியாத் தன்மையுமாக ஒன்றுக்கொன்று எவ்வகையிலும் பொருந்தாத நேர்விரோதமான இரண்டு பொருள் ஒன்றனிடத்து எவ்வாறு பொருந்துமென்றும், பிரத்தியட்சப் பொருளாகிய உலகம் சத்தாயிருந்தாலன்றி அனுமானப் பொருளாகிய பிரமம் எவ்வாறு சித்தியாம் என்றும் சிறிது ஐயம் இங்கு ஏற்படுகிறது. ஆகவே நந்தா! நீ உண்மையை உபதேசித்தருள வேண்டும்.

நங்:—சுவாமி! இவ்விஷயம் சற்குருவை அடைந்து உபதேசவாயிலாகக் கேட்டறிந்து திடஞானம் பெற்றுக் கொள்ளவேண்டிய விஷயமே. இதை என்னை ஒரு பொருட்டாக மதித்து என்னிடம் கேட்டுக்கொள்ள விரும்புகிறபடியால் தங்கள் கட்டளையை மீறமாட்டாமல் தாங்கள் நிற்கும் திக்கை நோக்கி நான் உபதேசிக்கிறேன். கேட்டருள்வீராக. பல துவாரங்களுடைய ஒரு பானையில் தண்ணீரை வார்த்து வைப்போமானால் அத்தண்ணீர் ஒரு துளியேனும் அங்கு தங்காமல் ஒழுகி ஓடிவிடுமா? அல்லது ஓடாமல் நின்றுவிடுமா?

வேதி:—தண்ணீரா! அது ஒழுகி ஓடிவிடும்.

நங்:—இல்லை! அதற்கேதேனும் ஆட்சேபம் உண்டுமா?

வேதி:—இல்லை! அதற்கு ஒரு ஆட்சேபனையும் இல்லை.

நங்:—அப்படியானால் ஒன்றல்ல, இரண்டல்ல; ஒன்பது துவாரங்களோடு கூடிய பல ஓட்டைகள் நிறைந்த ஒரு பாண்டத்தைப் போன்றதுதானே நமது சரீரம்!

வேதி:—ஆம்! பல துவாரங்கள் நிறைந்த ஒரு ஓட்டைப் பாண்டமேதான் நமது சரீரம். இல்லை என்று மறுக்க எவரால் முடியும்!

நங்:—சரி! "வினைப்போகமே ஒரு தேகங்கண்டாய் அவ்வினை ஒழிந்தால் தினைப்போதளவு நில்லாது கண்டாய்" என்றபடி ஒரு குறித்த காலம்வரை இந்த ஒன்பது ஓட்டையுள்ள அநித்தியமான தூல சரீரத்தில் நித்தியமான சூக்கும ஆன்மா இருளோடு ஒளியும் நீரோடு நெருப்பும் ஒன்றாய்த் துலங்குதல் போல் ஒருவாறு ஒழுகாமல் தங்கி நிற்கிறதல்லவா?

வேதி:—நந்தா! இந்த மர்மம் இப்பொழுதுதான் எனக்குப் புலனுகிறது. இந்த அசுத்த சரீரமாகிய ஓட்டைப் பாண்டத்தில் சுத்தமாகிய ஆன்மா தங்கி நிற்பது ஒரு ஆச்சரியந்தான்.

நந்:—ஸ்வாமி! அப்படியேதான் இந்தப் பொய்யான உலகத்தில் மெய்யான பிரமம் வியாபித்திருக்கிறது ஒரு ஆச்சரியந்தான்; அதற்கையமில்லை. கடம் பிரத்தியட்சமாயினும் அக்கடத்தை ஆக்குதற்கேற்ற மண்ணுடன் கலந்துள்ள சத்தி கண்ணுக்குப் புலப்படுவதன்றாதலின் அது அப்பிரத்தியட்சமாகும். கடமும் கடசத்தியும் அசத்தாய் மண்ணொன்றே முக்காலத்திலும் சத்தாதல்போல் உலகும் அதுகாரணமாகக் கலந்துள்ள மாயையும், உடலும் அது காரணமாகக் கலந்துள்ள உயிரும் அசத்தென்றாய் முடிவில் பிரமமொன்றே முக்காலத்திலும் சத்தாகும். இதனால் "பிரத்தியட்சப் பொருள் சத்தா யிருந்தாலன்றி அனுமானப் பொருள் சித்தியாது" என்பது எங்ஙனம் பொருந்தும்? அங்ஙனமாயின் கடமும் கடசத்தியும் அசத்தாயிருக்க அதன் காரணமாகிய மண் எங்ஙனம் சத்தாயிற்று? அது 'சத்தே அன்று' என்று ஆட்சேபித்தால் மண் இன்றிக் கடம் ஏது? சுவாமி! ஜலமே அலையாகவும் திவலையாகவும் நுரையாகவும் குமிழியாகவும் அந்த ஜலமே தடித்து உப்பாகவும் தோற்றப்பட்டு ஜலமன்றித் தமக்கென வேறு பொருள் இல்லாமல் முடிவில் வை ஜலமாகவே ஆவதுபோன்று பிரமமே உலகாகவும் உயிராகவும் சமட்டிவியட்டியாகத் தோற்றப் பட்டாலும் தோற்றமேயன்றி முக்காலத்திலும் அது பிரமமாகவே இருக்கிறது. எதார்த்தமான ஜலத்திலிருந்து எதார்த்தமற்ற அலை திவலை முதலியன எவ்வாறு தோன்றி நின்று அழிகின்றனவோ அவ்வாறே எதார்த்தமானபரிபூரணபிரமசைதன்னியத்திலிருந்து எதார்த்தமற்ற உலகு உயிர் மாயை முதலியன ஆரோபிதமாகத் தோன்றி, நின்று, அழிகின்றன. சுவாமி! இவ்வாறு தோன்றி நின்று அழிவதாகிய இந்த உலகத்தையும் அதன் உருவங்களையும் விளக்குவன சூரிய சந்திராதிகள். அச் சூரிய சந்திராதிகளை விளக்குவன நமது விழிகள். அவ்விழிகளை விளக்குவது நமது மனம். அம் மனத்தை விளக்குவது ஜீவன். அஜ்ஜீவனை விளக்குவது பரிபூரணமாய்த் தானே தானாய்ச் சர்வ சாட்சியாய் விளங்கிக்கொண் டிருக்கும் சிதாகாசம். அச் சிதாகாசத்தை விளக்கு

வது தில்லைச்சிதம்பரம் என்கிற சிற்றம்பலம். அச் சிற்றம்பலத்தைச் சென்று சேவிக்க எனக்கு விடை தந்தருளவேண்டும்.

[நந்தனர் வேதியரிடத்து இரகசியமாக மந்திரோபதேசஞ் புரிகின்றார். வேதியர் பரிபக்குவ மடைந்து விடை தருகின்றார்.]

எந்தகு பேத்தல் என்ற மெட்டு.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

பல்லவி.

சென்றுவா நந்தனே க்ஷேமமாக ஜெய
மன்றினில் வாழ் நட ராஜனைச் சேவிக்க (செ)

அநுபல்லவி.

இன்றே புனிதன் நான் ஈஸ்வ ரார்ப்புதம்
என்றே கண்டேன் இருப்பது கற்பிதம் (செ)

சரணம்.

மாதொருத்தியை நின்றன் மணவாள னிவனாவென
மறுத்தவன் அல்ல னென வழுத்தியே வந்து பினர்
நாதனைக் கேட்ட போது நாணி வெட்கினப் போலே
நான் நீ என்பதற் றேனுன் நல்லுப தேசத்தாலே (செ

நந்தா! நமஸ்காரம்! ஒரு சுயம்வர மண்டபத்தின் நடுவில் பல மன்னர்கள் பிரபுக்கள் வீற்றிருக்க அவர்களினிடையே சில தோழிமார்கள் மணமங்கையைக் கொணர்ந்து 'இவன் இன்னான்; இவனை நீ மணந்து கொள்கின்றாயா?' எனக் கேட்க "இவன் என் நாயகனுதற்கருகனல்லன்" என்று நிமிர்ந்து விடைகூறி வந்து தனக்குத் தகுந்த நாயகன் ஒருவனைக் காண்பித்து 'இவன் இன்னான், இவனை நீ மணந்து கொள்ளுகின்றனையா?' எனக் கேட்டபோது அம்மாது அப்படியே வெட்கித் தலைகுனிந்து "அவன் தான் என் நாயகன்" என்று சொல்ல முடியாமல் மௌனஞ் சாதித்துவிடுவது போலவே நின் உபதேசத்தால் நான் 'இது பொய் இது பொய்' என விலக்கி, சேதன வஸ்துவாகிய பிரமத்தை உணர்ந்து கிருதார்த்தனுனேன். உலக விஷயத்தில் இனித் தாமரை இலையின்மீது தண்ணீர் நின்ற நிலையில் நானுஞ் சகத்தோடு கூடி நிற்பேன். நீ க்ஷேமமாகச் சிதம்பரஞ் சென்றுவா!

[நந்தனர் வேதியரிடத்து உத்திரவு பெற்றுப் பல தலங்களைக் கடந்து சிதம்பரத்தை வந்தடைகின்றார்.]

அபராமபக்தி எந்து என்ற மெட்டு.

இராகம்-பந்துவராளி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

தில்லை இது தானோ-சென்று சேவிப் பேனோ (தில்)

அநுபல்லவி.

புல்லனான புலையன் அன்றோ பொன்னவையில் புகுதல் நன்றோ (தில்)

சரணம்.

சாலோக சா மீப மெனும் சாரூப சா யுச்ய மெனும்
பூலோகக் கை லாய மெனும் புண்ணிய வா லய மெனும் (தில்)

பெருங் கடற் பிறவி மாற்றும் பேரின்ப நிலையி லாற்றும்
பரும் பதம் பருகத் தேற்றும் பாஸ்கர கிருஷ்ணர் போற்றும் (தில்)

மோட்சமுகலதா என்ற மெட்டு.

இராகம்-சாருமதி-தாளம்-ஆதி.

பல்லவி.

நானினிப் பிறவா நலமே சேர
நாடினேன் காவா நாத வேதா (நா)

அநுபல்லவி.

ஏனோ தா ம த மெங் குற்றாய்
என்னைக் கடாட்சித் திதம் புரி வாய் (நா)

சரணம்.

நீ யன்றி நானிலை நித்ய ஜீவா தாரா
நெஞ்சத்து வேறெதும் நினைவிலை அரஹரா
தாயும் தந்தையும் சகலமும் நீதானே
தமியனை யாளத் தருண மீது பரனே (நா)

புலையன் நின் சந்நிதி புக முடியாதே
பொன்னடித் துணையன்றிப் புகல் கிடையாதே
அலைய விடாமல் ஆதரி சர்வா தாரனே
ஆலவாய் பாஸ்கர கிருஷ்ணர்த [illegible]மப காரனே (நா)

ஹா! ஜெகதீசா! பெற்ற தாய் தன் பிள்ளையை எவ்வளவுதான் கோபித்து அடித்துத் துரத்தினபோதிலும் அப்பிள்ளை தன் தாயையே தஞ்சமென்று அடைவது போலவும் கணவன் தன் மனைவியை எவ்வளவுதான் கொடுமையாக நடத்திவந்த போதிலும் மனைவி தன் கணவனையே தஞ்சமென்று அடைவது போலவும் அரசன் தன் குடி

கனைத் தாரதன்மையின் நிவருத்தினபோதிலும்குடிகள் அவ்வரசனையே தஞ்சமாக அடைவது போலவும் நடுக்கடலில் ஒரு கப்பலினது கொடி மரத்திலிருக்கிற பறவையானது அது வெருண்டு கரைசேர அவாவிப் பறந்து பறந்து முயன்று கரைகாண முடியாமல் மீளவும் அக்கொடி மரத்தையே அது தஞ்சமென வந்தடைவது போலவும் நான் நின்னடியே தஞ்சமென்றடைந்தேன். என்னை ஆட்கொள்வது நின்கடமை.

[அப்படியே அயர்ந்து ஓரிடத்தில்நித்திரைபுரிகிறார். கடவுள் தில்லை மூவாயிரவர் கனவில் நந்தனார் வரவுகூறி அவரை அக்கினியில் குளிப்பித்துக் கொணர உத்தரவிடுகிறார். நடேசதீக்ஷதர் காலையில் பொன்னம்பல தீக்ஷதர் வீட்டுக்கு வந்து]

ஏவோய் நடேச தீக்ஷதரே! என்ன விசேஷம்?

பொன்:—என்ன விசேஷம் நீர்தான் சொல்லுமே!

சுப்பையாதீக்ஷதர்:—(அங்கு வந்து) ஏவோய்! இன்று இரவு நான் ஒரு சொப்பனங்கண்டேன் ஓய்!

வாகீ:—என்ன சொப்பனங் கண்டீர் ஓய்!

பட்டோ:—நீர் என்ன சொப்பனங் கண்டீர் ஓய்!

வாகீ:—நானு! நான் நந்தனார்; நீர் என்ன கண்டீர் சொல்லும்!

பட்:—நானும் நந்தனார்; அப்புறம் என்ன கண்டீர் சொல்லும்.

சித:—என்காணும் நானும் நந்தனார்!

யக்:—அடே ஆமாங்காணும் "நானும் நந்தனார்; நானும் நந்தனார்" என்றால் நந்தனாருக்கு என்ன; அவர் யார்; அவரைப்பற்றி என்ன கனவு கண்டீர் சொல்லுமே!

சிதம்:—என்ன கண்டீர் நீர்தான் சொல்லுமே!

வாகீஸ்:—நந்தனார் என்பவர் ஜாதியில் புலையராம். அவர் சிவபக்தராம். அவர் ஆதனூரிலிருந்து நடேசர் தரிசனத்திற்காக இங்கு வந்திருக்கின்றனராம். அவரைத் தில்லை மூவாயிரவர்களும் சென்று அழைத்துவந்து அக்கினியில் ஸ்நானஞ் செய்வித்துச் சந்நிதிக்குக் கொண்டுவரவேண்டுமாம். இது கடவுள் கட்டளை.

அம்:—அடே ஆமாங்காணும்! நிஜந்தான்!. நிஜந்தான்! எனக்கும் அப்படித்தான் கடவுள் கட்டளை இட்டிருக்கிறார்.

மார்க்கண்ட தீக்ஷிதர்:—அது சரிங்காணும், புலையன் சந்நிதிக்குள் வரலாமோகாணும், முதலில் அதை யோசியுங்காணும்!

மிருத்தியஞ்:—அடா ஓய்! என்னவானாலும் நீர் இப்படிப் பேசுகிறீர்! "அங்கமெல்லாம் குறைந்தழுகு தொழுநோயராய் ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில் அவர் கண்டீர் யாம் வணங்குங் கடவுளாரே" என்று தமிழ் மறையில் திருநாவுக்கரசு நாயனார் ஏன் கூறி இருக்கின்றனர்?

மிருகண்டதீக்ஷிதர்:—ஏன் ஓய் மார்க்கண்டதீக்ஷிதரே! ஆறு குளம் கிணறு என்கிற வேறுபாடு பற்றி ஆற்று நீர் குளத்துநீர் எனப் பல பேதப்பெயர் பெற்றிருந்தாலும் அவைகளிலுள்ள நீரெல்லாம் ஒன்றே போலத் தனுகரண வேறுபாடுபற்றி 'அந்த ஜாதி இந்த ஜாதி' எனப் பல பேதங்கள் கற்பிக்கப்பட்டிருந்தாலும் அவற்றில் நிறைந்திருக்கிற ஆன்மாக்கள் எல்லாம் ஒன்றுதான் என்றும் எல்லா ஆன்மாக்களும் மோக்ஷத்தைப் பெறுவதற்கு உரியவைகளே என்றும் பிரம சூத்திரம் கூறுகின்றதே ஓய்!

சபாபதிதீக்ஷிதர்.—அடே ஆமா ஓய்! "ஒரு பனை இரண்டு பாளை ஒன்று நொங் கொன்று கள்ளு" என்ற வாக்கியத்தின்படி மேலே போகப்போக உபாதிகுணங்களாகிய ஜாதிமதம்முதலிய வேறுபாடுகளே இல்லை என்றல்லவா வேதம் முடிவுரைக்கின்றது! மேலும் கடவுள் கட்டளைப்படி நாம் நடந்து தீரவேண்டியது தானே ஓய்! பிறகு ஏன் இவ்வளவு சந்தேகம்?

குருசாமிதீக்ஷிதர்:—நீர் கூறுவதும் நியாயந்தான் ஓய் "அலையிலாவாரி போல் சச்சிதானந்தமா மான்ம வாகாசமே எங்கணும் அசலமாய் எலையற நிற்கவிங் கந்தணன் புலையன் என்றிம் மகாபேத மேக்கலை யினுற் கண்டதோ" என்று ஈஸ்வரனே சங்கராசாரியாருக்கு உபதேசித்திருக்கின்றன ரல்லவா? வாருங்கள் நந்தனாரைத் தேடிச் சென்று அழைத்துவரலாம். [நந்தனார் கனவுகண்டு]

வாராமலிருப்பாரோ என்ற மெட்டு.

இராகம்-சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

இப்போதும் வந்தாரே-கனவினில்
இனிதருள் தந்தாரே-நடராஜர் (இப்)

அநுபல்லவி.

அப்போது வந்தென்னை ஆதனூர்ச்சேரியில்
அப்பா நீ வாவென்று அருமையாயழைத்தவர் (இப்)

சரணம்.

வல்வினை எல்லாம் போக்கி வயலில் விளைவுண்டாக்கி
மறையவர் குறை நீக்கி மறைந்தவர் எனைநோக்கி (இப்)

தில்லை மூவாயிரவர் தேடிவருவாரென்றுர்
சேதி சிலவுரைத்துத் தேற்றித் திரும்பிச்சென்றுர் (இப்)

[கல்லோரும்கூடி நந்தனரைத் தேடிச்சென்று அவரை அழைத்து வந்து அக்கினியில் குளிக்குமாறு செய்ய அவர் குளித்தெளிந்து ஒரு முனிவராய்ச் சந்நிதிக்குள் பிரவேசிக்கின்றனர்.]

நிஜவர்மமுலனு என்ற மெட்டு.

இராகம்-உபாபரணம்-தாளம்-ஆதி.

பல்லவி.

பிறப் பிறப் பென்கிற பேதகந் தீர்ந்திடப்
பேரின்ப நிலையருள் ஈஸ்வரா (பிற)

அநுபல்லவி.

மறக்கறியேனுனை மனத்தினிலே சதா
மாறி மாறி நான் ஜெனித்து வாரிவைத்த லாபம்போதும் (பிற)

சரணம்.

சாஸ்பதம் நீயே சர்வமும் நீயே
தமியனை நினதடி சாரவைப்பாயே
பாஸ்கர கிருஷ்ணா பணியும் ப்ரதாநு
பக்தி ஞானமுற்றுப்ரம்ப வித்துவானேன் சத்யம் சத்யம் (பிற)

[சந்நிதானத்திற்குள் பிரவேசித்த நந்தனர் ஈஸ்வரனோடு கலந்து கைதன்னியமுத்தி அடைகின்றனர். தேவர்கள் நந்தனருடைய ஜோதிமயத்தைக்கண்டு ஸ்தோத்திரம் புரிகிறார்கள்.]

பணிபதி சாயி என்ற மெட்டு.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

பல்லவி.

நந்தனர் பக்தி ஞான சித்தி
நாதாந்த சொரூப (நந்)

அநுபல்லவி.

சிந்தித்தால் தித்தித்திடும் திவ்ய த்யான
சிவபிரான் மீதன்பு செலுத்திய மோன (நந்)

சரணம்.

ஆய்ந்து ஆய்ந்து அறிவன்றி உலகே
அலவல் வென்று அருவுருத்திடலே
தேய்ந்து தேய்ந்து சிதாகாச மயமாய்
சேர்ந்து சிறந்துசதா சிவமான பெருமான் (நந்)

முற்றிற்று.

12062

படிக்கவும் கேட்கவும் இன்பம்தரும் பாடல்கள்.

முத்தமிழ் க்ஷேத்திர மதுரை

## பாஸ்கரதாஸ் அவர்களியற்றிய

| | | | |
|---|---|---|---|
| இந்து தேசாபிமானிகள் செந்தமிழ்த் திலகம் 1,-2 பாகங்கள் | | விலை அணு | 0—6—0 |
| புதிய பெரிய பக்திரஸ கீர்த்தனங்கள் | | ,, | 0—5—0 |
| ௸ இரண்டாம் பாகம் | | ,, | 0—5—0 |
| லலிதாங்கி சரித்திரம் | ௸ யாரியற்றியது | ,, | 0—6—0 |
| வள்ளியம்மை சரித்திரம் | ௸ | ,, | 0—6—0 |
| அதிரூப அமராவதி | ௸ | ,, | 0—6—0 |
| சகுந்தலா 1, 2 பாகங்கள் | ௸ | ,, | 0—6—0 |

---

செந்தமிழ்ச் சரபம் விரகாலூர்

மகா-ள-ள-ஸ்ரீ சுப்பையாபிள்ளை அவர்களியற்றிய,

| | | | |
|---|---|---|---|
| கோவலன் சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 2 | 0 |
| நல்லதங்காள் சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 2 | 0 |
| அரிச்சந்திரன் திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 2 | 0 |
| பதிவிரதா சத்தியவான் சாவித்திரித் திருப்புகழ் | 0 | 2 | 0 |
| இராமாயணத்திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 2 | 0 |
| இலங்காதகனத்திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 2 | 0 |
| ஞானசௌந்தரி சரித்திரம் 1, 2 பாகம் | 0 | 4 | 0 |
| அல்லியரசாணி சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 2 | 0 |
| பாண்டவர் சரித்திரப் பாரதக்காவடிச்சிந்து திருப்புகழ் | 0 | 2 | 0 |
| பரமன் திருமால்மருகன் பக்திரஸக் கீர்த்தனை | 0 | 2 | 0 |

---

## சௌசௌ என்னும்

# ஐந்து சரிதம்.

புதுமுறைப்படியே! புதுப்பித்த புத்தகம்!!

ஒருமுறைபடித்தால்! உண்மை விளங்கும்!!

இது ஒரே இரவில் ஒரே நாடகத்தைப் போல் கதைத்தொடர்பும் சின் வேறுபாடும் மாறுவண்ணம் நடித்துக் காட்டுதற்கேற்றபடி மன்மதன், சுமேவதிச்சந்திரன், சாரங்கதரன், கபிலன், வசீகரன் என்ற ஐவர்களது சரிதங்களையும் ஒன்றாய்த் தொகுத்து, சிங்காரம் சோகம் வீரம் ஆசியம் மங்களம் முதலிய ரசங்களும் பொருந்த நவீன வர்ண மெட்டுக்களுடனும் காவல் நடையுடனும் இதிகாசபுராண [illegible] படிக்கப்படிக்கத் திகட் டாத பான்மை பெற்றுளது. [இதன் விலை அணா [illegible] தான்.]

இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்,

புக்ஷாப், ஸ்ரீ கோபால் மஹால், வடக்குச்சித்திரை வீதி,

மதுரை.